உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:.

# சித்தாந்தரத்நாகரம்.

## பாரததாற்பரியசங்கிரகம்.

இஃது,

சதுராதிகசத்பிரபந்தகர்த்தரும்,

பரமபாசுபதாக்ரகண்யருமாகிய

ஸ்ரீமத்

அப்பயதீக்ஷிதேந்திரரால்

இயற்றப்பட்ட

வியாக்கியானஸஹிதமானமூலத்தின்படி,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.


MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

*30th May 1881.*



**Registered Copy-Right.**

சிவமயம்.

## திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதேந்திரகுருவர்யாயநம:.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதமூர்த்திகள் ஸ்ரீபரமேசுவரனது அஷ்டதநுவிலொன்றாயுள்ளவரென மேலோர் கூறுகின்றனர். இவர் சைவஸ்தாபனம் பண்ணும்பொருட்டே யுலகின் கண்ணவதரித்தவர். இவரைச்சதுராதிக சதபிரபந்தகர்த்தரெனப் பண்டிதராயுள்ளபேர் கொண்டாடுவதால், அந்தப்பிரபந்தங்களிலொன்றாகவே யிந்தப்பாரததாற்பரியசங்கிரகமுங்கொள்ளத்தக்கது. இராமாயணத்தாலும், பாகவதத்தாலும்போந்த சிவபாரம்யங்களைத்திரட்டித் தனித்தனி யவ்வப்பெயர்களால் தாற்பரியசங்கிரகங்களுஞ் செய்திருக்கின்றனர். இன்னும், ஸ்ரீபாஷ்யவியாக்யாநாதியுக்கிரந்தங்களுஞ்செய்து அவருபகரித்திருக்கும் பெருநலத்தைக் கொண்டாடிக் களிக்கவறியாத மாடுகளாகச் சைவரென்னும் பேர்மாத்திரம்வகித்த சோம்பர் பலர்திரிகின்றனர். இவரைப்பாஞ்சராத்திரிகள் ஏகாத்மாவாதியாகப்புலம்புவர். இதுஸர்வாபத்தம். இவர்செய்துள்ள நூல்களை முற்றும்பார்த்தபின்னரன்றோ விவரையின்னாரெனல்வேண்டும்?

அந்நூல்களையதிகமாகக் கையாண்டுவரும் அவ்வமலமூர்த்தியினது ஸந்ததியாரிப்போது முள்ளவர்கள் ஸ்ரீநீலகண்டபாஷ்யத்தை ஸவ்யாக்யானத்துடன் ஶாந்திசெய்துவரும் மரபுரிமையையறியாதபேதைகளிடம் எது சொன்னாற்றானேறும். இன்னுந்தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஸ்மார்த்தர்பெரும்பாலார் சங்கரபாஷ்யத்தின் முகத்தில்விழிக்கவுமனமிசையாது ஷை ஸ்ரீ நீலகண்டபாஷ்யத்தையே யப்பியசித்துவருதல் விசாரித்துத்தெளிக. வையச்சேரி, நல்லச்சேரி, மான்குடிமுதலிய கிராமாந்தரங்களிலும் பார்த்திடுக. இன்னுந் திருநெல்வேலி சீமையிலும் ஏராளமாயிவ்வுத்தம சைவபாஷ்யம் பிரஸித்தியாயிருத்தலறிந்திடுக. இந்தமூர்த்திகள் (குருஞானவாஸிஷ்டம்) என்னும் இதிகாசத்தில் பிரம்ஹஸூத்திரவிர்த்திக்கு ஒருவியாக்கியானஞ் செய்திருப்பதில் ஷை ஸூத்திரத்தை ஶாரீரகசூத்திரம் என்றுகூறிய சங்கராசாரியர் ஸித்தாந்தத்தை யபாரமாயெடுத்துக் கண்டித்திருத்தலுங் கண்டறிக. இவ்வுண்மையையறியாத சிலபோலிஸ்மார்த்தரும் பாஞ்சராத்திரிகளைப்போலவே புலம்புவதுண்டு. அவர்சொல்லை விவேகிகள் மதிக்க விடம்பெறாது.

இவ்வமலதேசிகர் தாத்தாசாரி யென்பவனோடுவாதித்துக் கடைசியாய்அவன்றலையிடிவிழுந்து இறந்துபோகும்படிச்செய்து சைவமங்கலந் தழைக்கச்செய்தவர். இவருடைய பிரபந்தங்களி லொவ்வொன்றாகவினி முறையேயச்சிட்டுவருவோம். இவரிடம் அசூயையாற்புலம்புவது போலவே ஸ்ரீஹரதத்தாசாரியஸ்வாமிகள்விடயத்திலும் ஷை அவிவேகரத்நங்கள் கொஞ்சிப்பேசும். அதுவும் நிஸ்புருஹமெனவறிக.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டநாதன்றுணை.

# சித்தாந்தரத்நாகரம்.

## பாரததாற்பரியசங்கிரகம்.

:O:

### அபியுக்தர்வசநம்.

மறையெலாம்போற்றும் பதியுமைமகிழ
மாநடங்குயிற்று நம்பரனென்
றறையுமவ்வுண்மை யறிகிலாதுழலு
மாதர்தங்கூற் றிரிந்தோடக்
குறைவில்சீர்மா * பாரத முதனூல்கள்
கூறுமெய்ப்பொருள் சிவமென்றே
நிறைமதிகாட்டு மப்பயாக்கியனன்
னெறியிலின்புற விளக்கினனே.

### நூல்.

ஸ்ரீ மகாபாரதத்தில் பிரதி பாதிக்கப்படும் பரதத்துவப் பொருள் ஸ்ரீசிவபெருமானே யென்பதைப் பிரகாசப்படுத்தும் பொருட்டுச் செய்யப்பட்டிருக்கும் சிவஸ்தோத்திரத்தினுடைய முதல் மூல சுலோகம் வருமாறு.

---

* பாரதம், இராமாயணம், பாகவதமுதலிய நூல்களுக்குத் தாற்பரிய சங்கிரகங்கள் தனித்தனித் தீக்ஷிதசுவாமிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள், பாரததாற்பரிய சங்கிரகம் என்னுமிந்த நூல்முடிந்தவுடன் மற்றவை பின்னர் முறையே வெளியிடப்படும்.

## சுலோகம்.

శ్రీబాదరాయణమునిస్స్వయమేవవిష్ణుః । పార్థచ్ఛలాత్తమధికృత్యకృతేప్రబంధే
తస్యాపినిత్యమహితంశశిభూషణాత్వా । మామ్రేడయన్గురదర్శయదాదితత్త్వం॥ ౧

## மொழிபெயர்ப்பு.

விண்டுவெனும்வாதராயணமுனிவர்பற்குனனும்வியாஜமேற்கொண்
டொண்டுவளையானையதிகாரியெனவைத்தோதுநூலிலன்றோ
னெண்டருதெய்வமுமிந்துபூடணனுமாகுநின்னையேத்திபன்றே
பண்டைவருமாரியராயினராதிதத்துவமாய்ப்பரவுமொன்றே. (க)

இ-ள். விஷ்ணுவேதானாகிய வாதராயணமுனிவர் அருச்சுனன் என்னும் * வியாஜத்தினாலே ஸ்ரீகிருஷ்ணனை அதிகாரியாய் வைத்துச்செய்த பிரபந்தத்தில் அந்தக் கிருஷ்ணருக்கு நித்திய பூஜிதராயும், சந்திரனை ஆபரணமாகத் தரித்தவராயும் விளங்குந் தேவரீரை ஆதிதத்துவமாக அடிக்கடிச் சொல்வதினாலன்றோ அவர் உலகத்துக்கெல்லாம் குருவானார். எ-று.

ஸ்ரீவாதராயணர் விஷ்ணுவேயென்பதற்குப் பிரமாணம்.

కృష్ణద్వైపాయనంవ్యాసం । విద్ధినారాయణంప్రభుం
కోహ్యన్యఃపుండరీకాక్షా । న్మహాభారతకృద్భవేత్॥

இ-ள். கிருஷ்ணத்து வைபாயனரென்னும் வியாசரைப் பிரபுவாயிருக்கிற நாராயணரென்று தெரிந்துகொள். புண்டரீகாட்சனைக்காட்டிலும் அன்னியனாயிருக்கிற யார் தான் மகா பாரதத்தைச்செய்ய வல்லவனாகப்போகிறான். எ-று.

அவ் வியாசரோ வெனில், ஸ்ரீமகாபாரதமென்கிற நாமதேயமுள்ள பிரபந்தத்தை அருச்சுனனுடைய சரித்திரவர்னனாரூபமாயும், அதைத்தொடர்ந்த ஸ்ரீ கிருஷ்ணருடைய சரித்திரத்தில், உட்பட்டிருக்கும் அந்தக்கிருஷணருடைய மான்மியத்தை வர்னிக்கிற சொரூபமாயும் நிர்மாணம் செய்தார்.

వాసుదేవస్యమాహాత్మ్యం । పాండవానాంచసౌమ్యతాం
దుష్టతాంధార్తరాష్ట్రాణా । ముక్తవాన్భగవాన్ఋషిః॥

இ-ள். வாசுதேவனுடைய மான்மியத்தையும், பாண்டவர்கள் நன்மையையும், துரியோதனாதிகள் துஷ்டத்தனத்தையும் பகவானாகிய வியாசர் சொன்னார். எ-று.

* வியாஜம் - சாக்கு.

என்னும் வசனத்தினால், இந்தப் பிரசித்தமான பாரதத்தில் பாண்டவர்களை நாயகர்களாக ஏர்ப்படுத்தியது வியாஜமாத்திரமென்பது புலப்பட்டது. அவர்களைக் காப்பாற்றுந் தன்மையில் அதிசாக்கிரதையாயிருக்கும் ஸ்ரீகிருஷ்ணருடைய மான்மியத்தை வர்ணிக்கும்படியான தாகவே அந்தப் பாரதம் ஏர்ப்பட்டபடியால்.

அந்தக் கிருஷ்ணருடைய மகிமையே மிகுதிப்பட்டிருத்தலாலும், பாண்டவராஜ்ய லாபமானது ஸ்ரீ கிருஷ்ணர் ஆதீனமாகவேயிருப்பதாலும்பெறப்பட்டவுண்மையை அப்பாண்டவர்களுடைய ராஜ்யலாபத்தையே பிரதி பாதிக்கும் பாரதத்துக்கு முதலிலே சூதர்கூறும் வியாசவணக்கத்தாற் காண்க.

నమోభగవతేతస్మై । వ్యాసాయామితతేజసే

యస్యప్రసాదాద్వక్ష్యామి । నారాయణకథామిమాం॥

இ-ள். யாதொரு வியாசருடைய அநுக்கிரகத்தினாலிந்த நாராயணருடைய கதையைச் சொல்லுகின்றேனோ, அளவிறந்த தேஜசுடைய பகவானாயிருக்கும் அந்த வியாசர் பொருட்டு நமஸ்காரம். எ-று.

ஸ்ரீ மகாபாரதம் நாராயணருடைய கதையாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இம்மகாபாரதத்தைச்செய்தவியாசர் பிரம்ஹசொரூபத்தையறிந்த சகல பெரியோர்களுக்குங் குருவானார். அப்படிப்பட்ட பகவானாகிய வியாசர் கிருஷ்ணருடைய மான்மியத்தை வர்ணிக்கும்படியான வழியால் சிவபெருமானே பரம்பொருளென்னு முண்மையை வைசம்பாயனஜயமுனிசுமந்து முதலியதமதுசிஷ்யர்களுக்கு நன்கு விளக்கியிருத்தல் காண்க.

அந்தவியாசருக்கும், கிருஷ்ணருக்கும் நித்தியமாய்ப்பூசிக்குந்தெய்வமாகவே சிவன் பிரசங்கிக்கப்பட்டனர். அந்தக்கிருஷ்ணரால் அவ்வவதார அவசரத்திலும், அதற்கு முன்னவதார அவசரங்களிலும், பரவாசுதேவசொரூபமான மூலரூபத்திலும்சிவாராதனஞ் செய்யப்பட்டமைபிரசித்தம். இப்படிச்சேவ்யமானராய் விளங்கும் ஸ்ரீசிவபெருமான் அடிக்கடிப் படிக்கப்படுகின்றனர்.

எங்ஙனமெனின், பரியாயமாய்ப் பாரதகிரந்தத்திலே யெங்கும் ஸ்ரீகிருஷ்ணர் சிவபூஜா நிஷ்டராந்தன்மையும், அப்பரமேசுவரனுடைப் அநுக்கிரகத்தால் அவர்க்குச்சமஸ்த பிரபாவங்களுமுண்டாகுந் தன்மையும் வர்ணிக்கப்பட்டிருத்தல் காண்க.

ஸௌஷுப்திகபர்வத்தில், அசுவத்தாமனைக்குறித்துவெளிப்பட்ட சிவவசனம்.

సత్యశౌచార్జవత్యాగై। స్తపసానియమేనచ
క్షాంత్యాభక్త్యాచధృత్యాచ । కర్మణామనసాగిరా
అహంయథావదారాధ్యః। కృష్ణేనాక్లిష్టకర్మణా
తస్మాదిష్టతమఃకృష్ణా । దన్యోమమనవిద్యతే॥

இ-ள். சத்தியம், சௌசம், ஆர்ஜவம், தியாகம், தபசு, நியமம், க்ஷமை, பக்தி, தைரியம், கர்மம், மனசு, வாக்குஇவைகளால் கிருஷ்ணன் மிகுதியாக என்னை ஆராதித்துக் கொண்டிருப்பவனுகையால், அப்படிப்பட்ட கிருஷ்ணனைக் காட்டிலும் மேலான இஷ்டன் மற்றொருவனுமில்லை. எ-று.

இன்னும், ஆதிபர்வத்தில், சுபத்திராதேவியினுடையகலியாண பிரஸ்தாபத்தில் சமுத்திரமத்தியில் ஒரு தீபத்தில் ஸ்ரீகிருஷ்ணருடைய பூஜார்த்தமாய்ப் பிரவர்த்திக்கப்பட்ட மஹோச்சவம் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், உபமன்யு பகவானுடைய உபதேசத்தினல் ஸ்ரீ கிருஷ்ணர் பன்னிரண்டு வருஷ பரியந்தம்செய்து முடிக்கத்தக்க பாசுபத விரதாநுஷ்டான ரூபமாகிய சிவாராதனஞ் செய்தமை அநுசாசநீக பர்வத்தில் விஸ்தாரமாய்ப் படிக்கப்பட்டிருத்தலும் பிரசித்தம்.

அல்லதூஉம், பாரதசேஷமாகிய ஹரிவம்சத்தில் அர்ச்சுனனுடைய சரித்திரத்தைவிட்டு ஸ்ரீ கிருஷ்ணருடைய சரித்திரமாகவே நிபந்தனஞ் செய்யப்பட்டதன்றியும், பாரிஜாத சம்ஹிதையில் கைலாசயாத்திரா சந்தர்ப்பத்திலும், இன்னுஞ் சில இடங்களிலும் பூசை, ஸ்தோத்திரம், தபசு இவைகளால் அங்கங்கே ஸ்ரீகிருஷ்ணர் சிவப்பிரீதிகரமாகவே யொழுகினரென்று விரிவாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

துரோண பர்வத்தில், துரோண சம்மாரமான பின்னர், கோபத்தினுலே அசுவத்தாமரால் பிரயோகிக்கப்பட்ட ஆக்கினேயாஸ்திரம் கிருஷ்ணார்ச்சுனர்களிடத்தில் வியர்த்தமாய்ப்போய் விட்டபடியால், அந்த ஆக்கினேயாஸ்திரத்தைப்பார்த்து வெட்கமுற்றவராகி இது கெடுதியுடையது என்று பரித்தியாகம்பண்ணி விட்டுத் தெற்கே நோக்கிப்போகும் அவ்வசுவத்தாமருக்கு மார்க்கத்தில் எதிர்ப்பட்டவராகிய வியாசபகவான் அவருடைய லஜ்ஜையைப் பரிகரிக்கும் பொருட்டுக்கூறும் வசனம் வருமாறு.

దేవదేవస్త్వచింత్యాత్మా। అజయోఽక్షరవ్యయః
సర్వరూపంభవంజ్ఞాత్వా । లింగేఽర్చయతియఃప్రభుః
తస్మిన్నభ్యధికాంప్రీతిం । కరోతివృషభధ్వజః॥

இ-ள். தேவர்களுக்குத் தெய்வமாயும், எண்ணக்கூடாமலிருக்கும் ஆத்மபாவமுள்ளவராயும், செயிக்கக்கூடாதவராயும், குறைவில்லாதவராயுமிருக்கிறவிஷ்ணுவானவர் சிவபெருமானைச் சர்வரூபியாய்த் தெரிந்து அந்தமஹாப்பிரபுவாகிய அவரைச் சிவலிங்கத்தினிடமாய்ப் பூஜிக்கின்றார். எந்தப் புருஷனவன் சர்வசொரூபியாகச் சிவனையறிந்து இலிங்கத்தில் பூசை செய்கிறானே அவனிடத்தில் அதிகமான பிரீதியை ஸ்ரீபரசிவமூர்த்திசெய்கின்றார். எ-று.

என்னும் அந்தவிடத்திலேதானே கிருஷ்ணார்ச்சுனனிருவரும் முன்னர் நரநாராயணர்களென்கிற மகரிஷிகளாக விருந்துகொண்டு அறுபதினாயிரம்வருஷம் சிவனையாராதிக்கையில், அவர்களுய்யும் பொருட்டு ஒப்பில்லாதபலம், வீரியம், பராக்கிரமமுதலான அநேகவரங்கள் அவர்களுக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்டன வென்று கூறிய வியாசரைப்பார்த்து அசுவத்தாமர் நான் சிவபூசை செய்யவில்லையா வென்று கேட்ட அவசரத்தில் விடையாகப்போந்த வியாசவனம் வருமாறு.

జన్మకర్మతపోయోగా । స్తయోస్తవచపుష్కలాః
తాభ్యాంలింగేర్చితశ్శంభుః । త్వదర్చాయాఽశేషితః॥

இ-ள். கிருஷ்ணார்ச்சுனர்களுக் கெப்படியானால் உற்பத்தி, கர்மம், தபசு, யோகங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அப்படி

யே உனக்கும் பூரணமாய்க்கிடைத்திருக்கின்றன. அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்கள் சிவலிங்கத்தி னிடமாய்ப் பரசிவாராதனஞ் செய்கின்றார்கள். நீர் விக்கிரக வடிவத்தில் ஆராதனஞ் செய்கின்றீர். அதனால், உம்முடையபூசையைக்காட்டிலும் அவர்கள் பூசையில்சிவபெருமான்விசேஷபிரீதிசெய்யப்பட்டவராகின்றார். எ-று.

இன்னும்வேறொருவசனத்தில், மைநாகபர்வதத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தவஞ்செய்ததும், வெகுவரங்கள் பெற்றதுமாகிய விரண்டுஞ் சொல்லப்பட்டன. பாரிஜாதம் கொண்டுவரவேண்டுமென்னும் இச்சையினால் சிவனைப் பூசித்து ஸ்தோத்திரம் பண்ணுகின்ற கிருஷ்ணரானவர் சிவபெருமானால் அநுக்கிரகிக்கப்பட்டார் என்றும் பிரசங்கிக்கப்பட்டது.

ఇతిసంస్తూయమానస్తు । భగవాన్గోవృషధ్వజః
ప్రసార్యదక్షిణంహస్తం । వాసుదేవమథాబ్రవీత్
మనీషితానామర్థానాం। ప్రాప్తిస్తేస్తుసురోత్తమ
పారిజాతంచహర్తాసి । మాభూత్తేమనసోవ్యథా
పురామైనాకమాశ్రిత్య। తపస్త్వమకరోఃకిల
తదామమవచఃకృష్ణ । సంస్మృత్యధైర్యమాప్నుహి॥

இ-ள். இந்தப்பிரகாரம் கிருஷ்ணரால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட பகவானாகிய விருஷபத்துவஜரானவர் தமது வலக்கையை நீட்டி வாசுதேவனைக்குறித்துச் சொல்லுகிறார். உன்னாலேவிரும்பப்பட்டிருக்கிற பிரயோசனங்களுடைய பிராப்தியானது உனக்குச் சித்திக்குமாக. வாராய் தேவோத்தமனே! பாரிஜாதத்தையுங் கொண்டுவருவாய். உனக்கு மனதில் விசனம் வேண்டாம். நீமைநாக பர்வதத்தில் எப்போது தவஞ்செய்தனையோ, அப்போது சொல்லிய என்னுடைய வசனத்தை நினைத்துக்கொண்டு தைரியத்தை அடைந்திருப்பாயாக. எ-று.

అవధ్యస్త్వమజయ్యశ్చ। మత్తశ్శూరతరస్తథా
భవితాసీత్యవోచంయ । తత్తథానతదన్యథా॥

இ-ள். ஒருவராலும் சம்ஹரிக்கக் கூடாதவனையும், ஒருவராலும் வெல்லக்கூடாதவனையும், என்னைக்காட்டிலும் மிகுந்த

பலசாலியாயுமாகப்போகிருயென்றுசொன்னயாதொருவரமுண்டோ, அது அப்படியேபலிக்கும். வேறே விதமாகிறதில்லை. எ-று.

இந்தப் பிரகாரம் கிருஷ்ணருடைய சொரூபத்துக்குப் பூர்வம் எடுத்த ரூபங்களினுலே செய்யப்பட்ட சிவாராதனத்தில் சிவவசனங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அந்தக்கிருஷ்ணருடைய மூலரூபத்தில்செய்த சிவாராதனமும், பெற்ற வரலாபமுமாகிய விரண்டும் ஆரணியபர்வத்தில் தீர்த்த யாத்திராசந்தர்ப்பத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன.

తత్రగచ్ఛేత్సువర్ణాభం । త్రిషులోకేషువిశ్రుతం
యత్రవిష్ణుః ప్రసాదార్థం। రుద్రమారాధయత్పురా
వరాంశ్చసుబహూన్ లేభే । దైవతైరపిదుర్లభాన్
ఉక్తంచత్రిపురఘ్నేన । పరితుష్టేనభారత
అపిచాన్యైః ప్రియతమో ।లోకేకృష్ణభవిష్యసి
త్వన్ముఖంచజగత్సర్వం । భవిష్యతినసంశయః॥

இ-ள். எந்த விடத்தில் விஷ்ணுவானவர் சிவப்பிரசாதத்தின் பொருட்டு ஸ்ரீ ருத்ரமூர்த்தியை ஆராதனம்பண்ணிரோ, தேவர்க்களா லடையக்கூடாத வரத்தையடைந்தாரோ, அந்தவிஷ்ணுமூர்த்திசெய்த ஆராதனையால் சந்தோஷித்தவராகிய சிவபெருமானுல் அவர்க்கு அநுக்கிரகஞ் செய்யப்பட்டதோ, மூன்று லோகங்களிலும் பிரசித்தமாயிருக்கிற அந்தச் சுவர்நாபம் என்னும் க்ஷேத்திரத்தை யெப்படிப்பட்ட மகிமையுடையவனும் அடைய வேண்டியது. மேலும், திரிபுராந்தகராகிய சிவபெருமான் மகிழ்ந்துகூறியதோ வெனில், ஏபாண்டுநந்தன! சொல்லுதும். வாராய் கிருஷ்ண! மூன்று லோகத்திலுமுள்ள என்னுடைய அடியார்களில் நீயே அதிக இஷ்டனுகப்போகிருய். எல்லாவுலகங்களும் உன்னையே முதன்மையாய்ப்பெற்றதாகப் போகிறது. சமிசயமில்லை. என்னுடைய வரதானத்தினுலே அடையப்பட்ட சாமர்த்தியத்தினுல் செய்யும்படியான தேவமனுஷ்யர்களுக்கு சத்துருக்களான அசுரர், இராக்கதர் முதலியவர்களுடைய சம்ஹாரங்களினுலே பூமி, ஆகாசம், சொர்க்கமுதலிய சகல பிரதேசத்திலும் தேவர், மானவர் முதலியவர்களுடையபிரீதிக்கு விஷயமாகப்போகிருய். ஆகை

யால், சகலசகத்தும் உன்னையே முதன்மையாய்ப் படைத்ததாகப் போகின்றது என்பதாம். எ-று.

இந்தப் பிரகாரம் தேவர்முதலான பேர்களுடைய சத்ரு சங்காரத்தினாலே யுண்டாகும்படியான தோஷத்துக்குப் பிராயச் சித்தமுஞ் சிவாராதன ரூபமாகவே பகவானாகிய விஷ்ணுவால் செய்யப்பட்டதென்று தீர்த்தயாத்திராகட்டத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது.

తీర్థంకురుకులశ్రేష్ఠ । త్రిషులోకేషువిశ్రుతం
ప్రమీతినామ్నావిఖ్యాతం । సర్వపాపప్రణాశనం
యత్రబ్రహ్మాదయోదేవాః । ఉపాసంతేమహేశ్వరం
తత్రస్నాత్వాప్యుషిత్వాచ । ఋద్రందేవగణైర్వృతం
జన్మప్రభృతిపాపాని । కృతానినుదతేనరః
దేవీచాత్రనరశ్రేష్ఠ । సర్వదేవైరభిష్టుతా
తత్రస్నాత్వానరశ్రేష్ఠ । హయమేధమవాప్నుయాత్
జిత్వాయజ్ఞమహాప్రాజ్ఞ । విష్ణునాప్రభవిష్ణునా
పురాశౌచంకృతంరాజన్ । హత్వాదైవతకంటకాన్ ॥

இ-ள். வாரய்தர்மநந்தனா! இந்தத்தீர்த்தமானது மூன்றுலோ கத்திலும் பிரசித்தப்பட்டதாயும், பிரமதியென்னும் பெயராற் சொல்லப்பட்டதாயும், சகலபாவங்களையும் போக்கடிக்கத்தக்க தாயுமுள்ள தென்றறிவாயாக. எந்தத்தலத்தில் பிரமன் முதலிய தேவர்கள்சிவபெருமானையு பாசித்துக்கொண் டிருக்கிறார்களோ, அங்கேயுள்ள புண்ணியதீர்த்தத்தின்மூழ்கித் தேவகணங்களால்சூ ழப்பட்ட சிவனை ஆராதிக்குமானவன்சன்மமுதற்கொண்டுசெய்த பாவங்களைப் போக்கிக்கொள்ளுகிறான். தேவர்களாலே ஸ்தோத் திரம் பண்ணப்பட்ட தேவியானவள் இந்தவிடத்தில் வசித்துக் கொண்டிருக்கிறாள். அந்தத்தேவியினுடைய சந்நிதானத்திலிருக் கிறதீர்த்தத்திற் படிந்தமானவன் அசுவமேத பலத்தையடை கிறான். விஷ்ணுவானவர் சத்துருக்களை வதைத்து அந்தச்சம் ஹாரத்தா லுண்டாகிய பாவத்திற்காகச் சிவாராதனரூபமாகப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டார். எ-று.

இந்தவிடத்தில்சௌசசப்தத்தினாலே சிவாராதன ரூபமான பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. பிரமன்முதலிய தேவர்கள்

பரமசிவனை யுபாசித்துக் கொண்டிருக்கிருர்களென்று நேராய்ப் படிக்கப்பட்டிருப்பதன்றியும் தீர்த்தயாத்திரைவிதியில் நாராயணன்முதலியதேவர்க்களோடுகூடியபிரமனுக்குச்சிவப்பிரீதிகரமான ஆராதனஞ் செய்யுந்தன்மை யுண்மையால், நைமித்திக நியாயமாகச் சதாசிவாராதனஞ் செய்யுந்தன்மை பகவானுயிருக்கிற நாராயணனுக்குச்சொல்லப்பட்டது.

తతోగచ్ఛేతరాజేంద్ర । తీర్థంశతసహస్రకం
సహస్రకంచతత్రైవ। ద్వేతీర్థే లోకవిశ్రుతే
వుభయోర్హినరస్స్నాత్వా । గోసహస్రఫలంలభేత్
తత్రబ్రహ్మాస్వయంనిత్యం । దేవైస్సహమహీపతే
అన్వాస్యతేకురుశ్రేష్ఠ । నారాయణపురోగమైః
సాన్నిధ్యేతత్రరాజేంద్ర । రుద్రపత్న్యాఃకురూద్వహ
అర్చయిత్వాతుతాందేవీం । నదుర్గతిమవాప్నుయాత్ ॥

இ-ள். அவ்விடத்தில் சதசஹஸ்ரகம், சஹஸ்ரகம் என்னும் இரண்டு தீர்த்தங்கள் உலகப்பிரசித்தியாயிருக்கின்றன. அவ்விரண்டு தீர்த்தங்களிலும் மானவன்படிந்தால் ஆயிர கோதான பலத்தை யடைவான். அந்தவிடத்தில் பிரம்ஹாவானவர் நித்தியமாய்த் தேவர்க்களோடே கூடினவராய், நாராயணன்முதலிய தேவகணங்களினுலே அநுசரிக்கப்பட்டவராக ஸ்ரீருத்ரபத்தினியாகிய தேவி சந்நிதானத்தில் பக்தி செய்துகொண்டு வாசமாயிருக்கிருர். வாரும் குருவம்சத்தரசனே! அப்படிப்பட்ட சிவபத்னியாகிய தேவியைப் பூசித்தவன் துர்க்கதியை அடைகிறதேயில்லை. எ-று.

இந்தக்ஷேத்திரத்தில் தேவிசமேதரானபரமேசுவரனுடைய அர்ச்சனையும், அதன்பலமுமாகிய இரண்டையுங் காட்டும் வசனம் பெறப்படலால், கூட்டமாய்க் கூடிக்கொண்டிருக்கிற நாராயணன்முதலிய தேவர்க்களால் அநுசரிக்கப்பட்டவராகிய பிரம்ஹதேவருடைய ஸ்தானம் தேவினுடைய ஆராதனர்த்தமென்று அபிப்பிராயம் வெளிப்பட்டது.

యస్యబ్రహ్మాచవిష్ణుశ్చ ।త్వంచశక్రస్సహామరైః
అర్చయన్తసదాలింగం । తస్మాచ్ఛ్రేష్ఠతరోహికః॥

இ-ள். வாராய் இந்திரனே! பிரமனும், விஷ்ணுவும் நீயும் தேவர்க்களோடே கூட யாதொரு பரமசிவனுடைய இலிங்க மூர்த்தத்தை யெப்போதும் அர்ச்சனை செய்கிறீர்களோ, அவ ரைக்காட்டிலும் சிரேஷ்டமான தெய்வம் யாவருளர். எ-று.

என்று அநுசாசநீகபர்வத்திற் பெறப்பட்ட உபமன்யுபக வான் வசனத்தினல் பிரம்ஹ விஷ்ணுவாதி தேவர்கட்கு நித்தி யமாகவே சிவனையாராதிக்குந் தன்மையானது பிரகாசிக்கப்பட் டது. இந்தப்பிரகாரம் சௌஷுப்திகபர்வமுதலியவற்றுள் அவ தார ரூபமுள்ள பரவாசு தேவரூபத்தையுடைய கிருஷ்ணருக்குச் சிவபூசையினாலேயே சகலவரலாபங்களுங்கிடைத்தனவாய்ச்சொ ல்லுவதினலும், பிரத்தியட்சமாகச் சொல்லப்பட்ட நிரதிசயபிர பாவத்தினற் பிரகாசிக்கும் சிவபெருமானுக்கே சாட்சாத்பரப் பிரம்ஹத்வம் சம்பவிக்கிறதாகிய வம்மகிமா விசேஷத்தாலும், அந்தக் கிருஷ்ணரால் பூசிக்கத் தக்கவராயிருக்கிற சிவபெருமா னுக்கு எந்தவுயர்வுக்கு மேலொரு வுயர்வில்லையோ, அவ்வுயர்ந்த தன்மை யானது வியஞ்சனமார்க்கத்தால் தோற்றப்படுகிறது. மகாபாரதத்துக்கு வாச்சியராயுள்ளநாராயணருடைய சரித்திரத் தின்வழியாய், அவருடைய பெருமைக்கு உயர்ந்த பெருமையை யுடைய பரசிவமூர்த்தி வைபவமே அம்மகாபாரதத்தின் முதன் மைபெற்றதென வெளிப்பட்டது. ஸ்ரீமகாபாரதமானது உயர்ந்த காவியமாக என்னலே செய்யப்பட்டதென்று பிரம்ஹாவைக் குறித்துச்சொல்லிய வியாசரைப்பார்த்து,உன்னலேகாவியமாகச் செய்யப்பட்டதென்று சொன்னய். ஆகையால் அதுகாவியமாகப் போகிறது என்றுசொல்லி அநுக்கிரகித்தனர். பிரம்ஹ தேவர் அநுக்கிரகித்தமையால் அது நன்மையான காவியமாம். இதற்கு லட்சணமேதெனின், எந்தக்காவியத்தைக் காட்டிலும் அதிக மானகாவியமில்லையோ அதுநற்காவியம். இந்தக்காவியத்துக்கதி சயமான காவியத்தை யொருவருஞ் செய்யப் போகிறதில்லை. சகலத்தையும் அதிசயித்திருக்கிற காவியத்துக்கு நற்காவியம் என்னுந்தன்மை யுண்டாம். அப்படிப்பட்ட காவியமேகோரத் தக்கது. சகலமான கவிச்சிரேஷ்டர்களுக்கும் பிழைக்கவேதுவா யுள்ளது. சகலமான சாத்திரங்கள், புராணங்கள், வேதங்கள் இவைகளின் பொருள்களடங்கியிருப்பதால் சகல காவியத்துக் கும் அதிசயித்தைக் கொண்டிருக்குமிது உத்தம காவியமாம்.

## இதற்குப் பிரமாணம்.

పర్జన్యయివభూతానాం । అక్షయ్యోభారతద్రుమః॥

இ-ள். சகலமானவுயிர்களுக்கும் வருஷிக்கும்மேகம்போலப் பாரத மென்கிற விருட்சமானது அக்ஷயமாயிருக்கிறது. எ-று. இப்படிக்குப்பிரமஹாவின் அநுக்கிரகங்கிடைத்தபின்னர் இந்தப் பாரதம் என்று சொல்லுங் கிரந்தத்தின் முன்னரோ அவரவர்கள் செய்யுங்காவியங்கள் பிழைக்கின்றனவென்று சொல்லப்படுந்தன்மையால், இம்மகாபாரதமாகிய காவியமொன்றற்கே உத்கர்ஷம் சொல்லப்பட்டது. இவ்வுத்தம காவியத்துக்கு * வாச்சியாதிசாயித்வமுண்டு. வியஞ்சனமென்கிற லட்சணத்தினலே பிரதானமாகுந்தன்மையும் வெளிப்பட்டது. வாச்சியம் என்றுகவிகள் எதைச் சொல்லுகிறார்களோ அதைவிளக்கும் உதாரணம் வருமாறு.

ప్రతీయ్యమానంపునరన్యదేవ।వస్త్వస్తివాణీషుమహాకవీనాం
ఆభాతితద్వ్యంజనమిత్యుదారం।లోకేషులావణ్యమివాంగనాసు॥

இ - ள். மகாகவிகளுடைய வாக்குகளில் பிரதான வஸ்துவைப்பார்க்கிலும் வேறுயிருக்கும் வஸ்துவானது ஸ்திரீகளுடைய முகத்தில் அழகு வேறுயிருப்பதுபோல் உயர்ந்ததாக வியஞ்சனமாய்த் தோற்றுகிறது. எறு.

இப்பாரதத்திலோ வென்றால், வாச்சியமானதுபரப்பிரம்ஹமென்று சம்பாவனே சம்பவிக்கிறபடியால் நாராயணனுக்கு நிரதிசயமான மகிமையுண்டாம். நாராயணனுக்கும் பூச்சியனாயிருக்கையால்சகலகிரந்தத்திலுஞ்சொல்லப்பட்டிருக்குஞ்சிவபெருமானுடைய மகிமையானது விளங்கிக்கொண்டிருக்கிறது.

அப்படியே சகலத்தையும் அதிசயித்திருக்குஞ் சகுண பரப்பிரமஹ ரூபியாயின சிவமானது வியஞ்சனத்தால் தோற்றிக்கொண்டே யிருக்கிறது. இதுவே யுண்மையான தொனி ரூபமானலட்சணம். அந்தப் பரப்பிரமஹ ரூபியானவர் இந்தக்கிரந்தத்தில் அந்தந்தவிடத்திலேயும், இதற்கு இது உயர்ந்ததென்று

* வாச்சியம், கிருஷ்ணன்.
அதிசயித்வம், சிவம்.

தோற்றும்படியான பாவங்கள், ரசங்கள், அலங்காரங்கள் தொனிகள் முதலானவைகளாலே பிரதானமாக வெளிப்படுகையால் கிரந்தகர்த்தாவாகியவியாசருடைய அபிப்பிராயம் இனிதுவெளிப்பட்டது.

—:o:—

## அவதாரிகை.

அதற்குப் பின்னர் மற்றொருகவியாலும் பாரதத்தில் சிவபெருமானுக்குப் பரப்பிரம்ஹ பாவத்தினுடைய பிரகாசத்தை வெளிப்படுத்துகிறுர்.

### சுலோகம்.

మోహాభిభూతమఖిలంజగదావిరించం । త్వామేకమేవభగవన్రహితంచతేన
విఖ్యాప్యమంకణిగదివ్యకథానుషక్త్యా । త్వాంబ్రహ్మతేనచమునిస్స్ఫుటయాంబభూవ ॥౨॥

### மொழிபெயர்ப்பு.

பங்கயனீருமென்ன வுலக மருள்போர்த்தழியும் பண்பிற்கண்டு
மங்கணனீ யம்மாயத்தாழ்குரு யென்பதனே யலகில்சீர்த்தி
மங்கணிசர் நற்கதையால் வகுத்துவரு காரணத்தால் வயங்குமேன்மை
தங்குபராபரமென்னக் காட்டினர்மா மறைமுனிவர் தனப்பிலொன்றே. (உ)

இ-ள். சகலமாயுள்ளசகத்தும் பிரம்ஹாபரியந்தம், மோகத்தினுலே ஆவரிக்கப் பட்டதாயும், அந்தமோகத்தினுலே பிரிந்திருக்கிறவராக உம்மையொருவரையே மங்கணிகசித்தருடைய திவ்ய கதையின் பிரசங்கத்தினுல் பிரகாசப்படுத்தி அக்காரணத்தினுல்உம்மையே பரப்பிரம்ஹமாக வியாசர்வெளிப்படுத்தினுர். எ-று.

ஆரணியபர்வத்தில், தீர்த்தயாத்திரா கட்டத்தில் சப்தசாரஸ்வததீர்த்தப் பிரசங்கத்தில் சொல்லப் படுவதோவெனில், மங்கணிக சித்தரானவர் தர்ப்பையை யறுக்கும்போது தர்ப்பையினுல்அறுபட்டகாயத்தினுல்அவருடையகையிலே நின்று * சாகரசமானது பெருகிற்று என்பதேயாம்.

సవైశాకరసంసృష్టా । హర్షావిష్టోమహాతపాః
ప్రనృత్యతికిలవిప్రర్షిః । విస్మయోత్ఫుల్లలోచనః

---

* சாகரசம் = அமிர்தம்.

తతస్తస్మిన్ప్రవృత్తేవై । స్థావరంజంగమంజగత్
ప్రనృత్యత్యుభయంహ్యాత । తేజసాతస్యమోహితం
బ్రహ్మాదిభిస్సురైరాజన్ । ఋషిభిశ్చతపోధనైః
విజ్ఞప్తోవైమహాతేజాః । రుషేరర్థేనరాధిప
యధాననృత్యతేదేవా । తధాత్వంకర్తుమర్హసి
తతఃప్రనృత్తయామాస । హర్షావిష్టేనచేతసా
సురాణాంహితకామార్థం । ఋషిందేవోభ్యభాషత
విభోమహర్షేధర్మజ్ఞ । కిమర్థంనృత్యతేభవాన్
హర్షస్థానంకిమర్థంవా । తవాద్యమునిపుంగవ ॥ ఋషిః ॥
కింనపస్యసిమేదేవ । కరాచ్ఛాకరసంసృతం
యందృష్ట్వాహంప్రనృత్తోవై । హర్షేణమహతాన్వితః
తంప్రహస్యాబ్రవీద్దేవో । మునింరాగేణమోహితం
అహంవైవిస్మయంవిప్ర । దర్శయామ్యత్రపశ్యమాం
ఏవముక్త్వానరశ్రేష్ఠ । మహాదేవేనవైతదా
అంగుష్ఠాగ్రేణరాజేంద్ర । స్వాంగుళిస్తాడితోభవత్
తతోభస్మక్షతాద్రాజ । న్నిర్గతంహిమసన్నిభం
తందృష్ట్వావ్రీళితోరాజన్ । సమునిఃపాదయోఃపతత్ ॥

இ-ள். அந்தமங்கணிகசித்தரானவர் பெருகாநின்ற சாகரசத்தைப்பார்த்து மகாசந்தோஷத்தை யடைந்தவராகி, மகாதபோநிஷ்டராகிய அம்முனிவர் நிர்த்தனம்பண்ணினார். ஆச்சரியத்தினாலே மலர்ந்திருக்கிற நேத்திரங்களுள்ளவராய்க் கூத்தாடும்போது சரம், அசரம் என்னுமிரண்டுவிதமாய் விளங்கு மிந்தவுலகமானது கூத்தாடிற்று. அவருடையதேஜசினாலேமயங்கிவிட்டது. அவ்வுலகத்தின் மயக்கந் தீரும்படியாகப் பிரம்ஹா முதலிய தேவர்கள், தபோதனர்களாகிய ருஷிகள் யாவரும், கூத்தாடும்படியான இவ்வுலகத்தின் மயக்கமானது தீரும்படி தேஜோமூர்த்தியாகிய மகாதேவரிடத்திற்போய் விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். தேவதேவனே! எப்படி யிந்தவுலகமானது கூத்தாடாமலும், மயங்காமலும் இருக்குமோ, அந்தப்படிக்குச் செய்வதற்கு நீரே யோக்கியராயிருக்கின்றீர் என்று அநேகப்பிரகாரமாய்ப் பிரார்த்தித்தபின்பு சந்தோஷத்தோடு கூடிய மனத்தராகிய பரசிவப் பிரபுவானவர் நிர்த்தனம்பண்ணித் தேவர்களுக்கு

இதமுண்டாகிற நிமித்தம், மங்கணிகரிஷியைப் பார்த்துச் சொல் லுகிறார். ஓபிரபுவாகிய மகரிஷியே! நீயென்னகாரணத்தால் கூத் தாடுகிறாய்? இப்போது சந்தோஷத்துக்கு இடம் யாது? என்று கேட்கையில், அந்தரிஷியானவர் என்னுடையகையில் இருந்து பெருகாநின்றசாகரசத்தைத்தேவரீர்பார்க்கவில்லையா? யாதொரு சாகரசத்தை நான் பார்த்துச் சந்தோஷத்தோடு கூத்தாடினே னே அந்தச்செய்கையைத் தேவரீர் அறியமாட்டீரா? என்று கூறினர். ஆசையினுலே மயங்கப்பட்டவராகிய அந்த ரிஷியைச் சிவபெருமான் பார்த்து நானோரதிசயத்தை இப்போது காண்பிக் கிறேன் என்னைப்பாரும் என்றுசொல்லி (ஏதர்மநந்தனரே! கே ளும்) மகாதேவரானவர் தம்முடைய அங்குஷ்டவிரல் நுனியி னுல் மற்றொரு தம்முடைய விரலை அடித்தார். அடித்தமாத்திரத் தில் அவ்விரல் நகச்சந்தினின்றும் வெண்மையான பனிக்கட் டியைப்போன்ற விபூதியானது வெளிப்பட்டது. அந்த ரிஷியான வர் அதைப்பார்த்து அவமானத்தை யடைந்தவராகி அந்தப் பர மேசுவரனுடைய பாதங்களில் சரணுகதியானுர். எ-று.

என்று அந்த விடத்தில் பிரம்ஹாதி ஸ்தாவராந்தமாயிருக் கிற சகல ஜகத்துக்கும் மங்கணிகரிஷியைத்தவிர மயக்கஞ்சொல் லப்பட்டது. மங்கணிகரிஷியைப்போலவே, கிடைத்தமோகத்தி னுலே கூத்தாடிக்கொண்டிருக்கிற பிரம்ஹாமுதலியோர்களுடைய பிரார்த்தனையினுலே சிவபெருமான் மங்கணிகரிஷியினுடைய நிர்த்தனத்தை நிறுத்தினர் என்கிற சொல்லினுலே சிவனுக்குப் பிரம்ஹாதி தேவர்கள்போல் மோகமயக்கமானது இல்லையென்று வியஞ்சனத்தால் வெளிப்பட்டது. தான் மோகத்தை யடைந் தவனுயிருந்தால் ஒருவனுடைய மோகத்தைத் தீர்க்குஞ்சாமர்த்தி யம் இல்லையாகையால், சிவனைக் குறித்துப் பிரார்த்திக்கும்படி யான பிரம்ஹாமுதலிய தேவர்க்களுடைய மயக்கத்தைத்தீர்க்கும் படியானதற்கும், மயக்கத்தினுற்கூத்தாடும் ரிஷியினுடைய கூத் தை நிறுத்தும்படி யானதற்கும் அவரொருவரே யுளரென்பது வெளிப்படலால் சகல சீவர்க்களும் மோகத்தையே யடைந்த பேர்களெனவும், பரப்பிரம்ஹம் ஒன்றே மோக மயக்கத்தைத் தாண்டியது எனவும்உண்மை விசாரத்தால் கொள்ளப்பட்டது. மோகம் உள்ளது, மோகமில்லாதது என்னும் விசேஷவசனங்

கொண்டே, பிரம்ஹா முதலான சகலமானபேர்களும் ஜீவர்க்க ளெனவும், சிவனொருவரோ பரப்பிரம்ஹமெனவும் ஸ்ரீவேதவியாச முனிவர் பாவனையால் ஸ்திதப்பிரக்ஞை யுடையராகுந் தன்மை இதன் தாற்பரியமாக வெளிப்பட்டமை காண்க.

---

## அவதாரிகை.

இந்தப்பாரதமாகியமஹாகிரந்தத்தில், உட்பட்டிருக்கும் வாக்கிய விசேஷங்களினால் கிடைக்கப்பட்ட அர்த்தத்தைச் சங்கிரகித்துப் பிரவசனம் பண்ணுகிறார்.

## சுலோகம்.

తస్మాచ్చ మోహతదభావకృతాద్విశేషా। జన్మస్థితిప్రళయభాగకిలంత్వదన్యత్
తత్కర్తృవస్తుపరమంత్వమితిప్రబోధం। జాతంవిభావయచతస్యతదీయ్యవాచం॥

## மொழிபெயர்ப்பு.

அறைதருமக்காரணமே ததினின்றுமோகமத னபாவமென்ன
முறையில்வருமெவைநினக்கன் னியமாகமுத்தொழிலின் முடிந்துமேவுஞ்
செறிதருமவ்வகிலேச ஞயுமுயர்பொருளாயுந் தெளியவுண்டாம்
இறைவநினை ஞானார்த்தந் தனைநீயே முனிமொழிகொண் டெண்ணிடாயே. (ரு)

இ-ள். அக்காரணத்தி னின்றும், மோகமென்ன, அதினுடைய அபாவமென்ன, இதுகளினாலே செய்யப்பட்ட விசேஷத்திலே நின்றும் உமக்கன்னிய மானதெல்லாம் ஜென்மஸ்திதிப் பிரளயத்தை யடைந்ததோ, அந்தவுலகத்துக்குக் கர்த்தாவாயும், உத்கர்ஷமான வஸ்து வாயுமுள்ளவர் நீரென்று ஞானமானது உண்டாச்சுது. அந்தஞானார்த்தமானவியாசருடையவசனத்தைத் தேவரீரோ பரியாலோசனை செய்வீராக. எ-று.

மங்கணிகசித்தர் சிவபெருமானுடைய பாதங்களில் நமஸ்கரித்த பிற்பாடு அவருடைய வசனமாகப் படிக்கப்பட்ட வாக்கியங்கள் வருமாறு.

నాన్యం దేవమహంమన్యే। రుద్రాత్పరతరంమహత్
సురాసురస్యజగతో। గతిస్త్వమసిశూలధృత్
త్వయాసృష్టమిదంసర్వం। త్రైలోక్యంసచరాచరం
త్వామేవభగవన్సర్వే। ప్రవిశ్యంతియుగక్షయే

దేవైరపినశక్యంతే । పరంజ్ఞాతుంకుతోమయా
త్వయిసర్వేపిదృశ్యంతే । సురాబ్రహ్మాదయోనఘా
సర్వస్త్వమసిలోకానాం । కర్తాకారయితాచహా
త్వత్ప్రసాదాత్సురాస్సర్వే।నివసంత్యకుతోభయా॥

இ-ள். உருத்திரமூர்த்தியைக்காட்டிலும் உத்கிருஷ்டமாயும், மஹத்தாயும் இருக்கிறதாக மற்றொரு தெய்வத்தை நான் எண்ணவில்லை. தேவர்க்கள், அசுரர்கள், முதலிய பேர்களுடைய உலகத்துக்கெல்லாம் நீரோகதியாக விருக்கின்றீர். சகலசராசரங்களோடு கூடிய இம்மூன்றுலோகமும், யாவும் தேவரீரால் சிருட்டிக்கப்பட்டன. வாருமையா பகவானே! பிரளயகாலத்தில் சகலமான பேர்களும் தேவரீரிடத்திலேதானே லயமாகின்றார்கள். தேவர்க்களாலுந் தேவரீருடைய பெருமையை அறிவதற்கு அருமையாயிருக்கிறது. எந்தக்காரணத்தினால் என்னாலறியச் சாத்தியமாகப் போகிறது? நின்மலராயுள்ளவரே! தேவரீரிடத்தில் பிரம்ஹா முதலிய தேவர்க்கள் உண்டாகிறார்கள். நீர் சர்வரூபியாயிருக்கின்றீர். இந்த லோகங்களுக்குக்கர்த்தாவாயும், படைக்கின்றவராயும் தேவரீரேயுள்ளவர். உமது அநுக்கிரகத்தினாலே சகலமானதேவர்க்களும் பயமில்லாதவர்களாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். எ-று.

இந்த வாக்கியத்தால் பரமசிவனுக்குச் சகல சிருட்டியும், பிரளயகால பரியந்தமான பாரம்யதர்மமும் சர்வாத்மாவாயிருக்குந் தன்மையும் சொல்லப்பட்டது. சிவனேபரப்பிரம்ஹமென்று நிச்சயித்து மங்கணிகர் பிரஸ்தாபித்த வுண்மை வெளிப்பட்டது. இந்த நிச்சயம், விபூதிவெளிப்பட்ட மகிமையாலன்று. சாகரசம் வெளிப்பட்டதுபோல். ஆச்சரிய ஹேதுவான ரிஷியின் சரித்திரத்தினுடைய தன்மையில் வேறுபட்ட தன்மையே சிவமகிமோத்கர்ஷப் பிராப்பியமுடைத்தென்க. எம்முடைய நிர்த்தனத்தைப் பார்த்துச் சகலரும், அந்தக்கதியினால் பிரம்ஹாபரியந்தம் மயங்கினவர்களாய்க் கூத்தாடும்போது சிவபெருமான் மோகமயக்கமில்லாதவராய், நிர்த்தரகிதராய், எம்மசமீபத்தில் வந்து எம்ம நாட்டியத்தை நிறுத்தினர் என்று அந்தச்சித்தர் மயங்கி அப் பரமேசுவரனுடைய மகிமோத்கர்ஷத்தை யெடுத்துரைத்தமையேமுக்கியமென்க. இந்த வுண்மையால், மங்கணிக சித்தரவசன

முகாந்தரரூபமாகவே சிவனே பரப்பிரம்ஹமென்று முனிபுங்கவராகிய வியாசர் பாவித்தாரென்பது நிச்சயிக்கப்பட்டது. முன் சுலோகத்துக் குரித்தான ரிஷியே காரணமாய்க்கொண்டு அவருடைய கதையி னுதாரணத்தினாலே பரமசிவனுக்குப் பரப்பிரம்ஹ பாவத்தினுடைய பிரத்தியட்சத் தன்மையானது பிரகாசிக்கப்பட்டது.

—:o:—

## அவதாரிகை.

இவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திரத்தினுதாரணத்தினாலேயும் அந்தப்பரப்பிரம்ஹ பாவத்தை வெளிப்படுத்துகிறார்.

## சுலோகம்.

కైలాసశైలశిఖరేహరిపార్థదృష్టం । త్వాంబ్రహ్మనాథపరమంసముదీర్యసాక్షాత్
తల్లక్షణంత్వయమనన్యతదియ్యధర్మ । క్రాంతేకియచ్ఛభవతిస్ఫుటమాచచక్షే ॥౪॥

## மொழிபெயர்ப்பு.

கண்ணனருச்சுன னிவராற்கயிலையெனு மலைச்சிரசிற்காணுநின்னை
யெண்ணுமுயர்வறுபிரம மெனவாழ்த்தி யேனையர்பா லெய்தாவச்சீர்
நண்ணுபரதருமத்தி னீயேநன்கிலகுநலத் தாலிவ்வேதப்
புண்ணியமாமுனிநின்சீ ரெவ்வளவாய்ப்புகன்றனனெம் புனிதவாழ்வே. (ச)

இ-ள். வாரீர்நாதனே! கைலாசமலையி னுச்சியில் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்களாற் காணப்பட்டிருக்குந் தேவரீரைச் சாட்சாத் பிரம்ஹமாக ஸ்தோத்திரஞ்செய்து, அப்பிரமத்துக்குரிய தர்மத்தில் வேறொருபொருளின்றித் தேவரீரே தோன்றிய படியால் அப்படிப்பட்ட தேவரீர் விஷயத்தில் அப்பிரமத்துக்குரிய லட்சணத்தை யெவ்வளவு பிரகாசமாய் இந்தரிஷியானவர் சொல்லியிருக்கிறார். எ-று.

கிருஷ்ணார்ச்சுனர்கள் பாசுபதாஸ்திர சந்தானப் பிரகாச விசேஷத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸ்ரீமஹாகைலாசத்தை யடைந்தபோது அப்பரமேசுவரனுடைய பெருமையின் வர்ணனையானது அடியில்வருமாறு மஹாகவிகளான வியாசபகவானால் பிரவசனிக்கப்பட்டது.

மாக அந்தவிடத்திற் காண்பிக்கப்பட்டது. இன்னும்சிலதன்மைகள்வேதாந்தவித்தை அறிந்தபேர்களாலே காணப்படுந்தன்மையும், அகிலஜீவர்க்களைக்காக்குந் தன்மையும், தண்டிக்குந்தன்மையுமாகியயாவும் பரப்பிரம்ஹத்தினுடைய தன்மைகளாக வர்ணிக்கப்பட்டன. பிரம்ஹசநாதனம் என்று சிவனே வேதத்தினுலே சொல்லப்பட்டவர். அந்தச்சொல்லுக்கு வேறுவிதமானபொருளும் உளது. அதுபிரணவமந்திரபிரதிபாத்யர் என்பதேயாம். அப்படிப்பரப் பிரம்ஹரூபத்தினுடைய தன்மையைச்சொல்லும்படியான பரதத்வ வாசகமாகிய பிரணவத்தினுடைய அர்த்தமாயுள்ளவராகுந் தன்மைபற்றியே பிரம்ஹசநாதனமென்று பிரகடனஞ்செய்யப் பட்டமைகாண்க.

—:0:—

## அவதாரிகை.

அதற்குப்பின்னர் மற்றொருவிதத்தால் ஸ்ரீகிருஷ்ணருடைய சரித்திரவர்னனையில் அந்தப்பரமேசுவரனுடைய அபிவியக்தியை வெளிப்படுத்துகிருர்.

## சுலோகம்.

నారాయణస్యసుచిరంత్వదుపాసకస్యయద్బ్రహ్మభావమవతద్భవభావనాప్తం
యత్తేస్తుతింతదుదితాంపరభావగర్భాంత్వాంబ్రహ్మతేనచమునిస్ఫుటయాంచకార. ॥౫॥

## மொழிபெயர்ப்பு.

நின்னுபாசனைநெடுகாள்செய்துவருநாரணனைஞேயமென்னப்
பன்னியதெந்தாய்நின்றன்பிரமபாவனையாமப்பளகிறன்மை
யன்னவன்கூறுந்துதியினகப்பொருளாலும்மன்புசான்றவேதத்
தின்னலமெற்குதவுறுமம்முனிமொழியாலும்முண்மையேற்குமன்றே. (ரு)

இ-ள். நெடுநாளாய்த் தேவரீரை யுபாசித்துக் கொண்டுவருகிற நாராயணருக்கு யாதொருபிரம்ஹ பாவத்தைச்சொன்னரோ அதுதேவரீருடைய பாவனையினுலேயேவந்ததாம். ஏனெனில், அந்தநாராயணரால் சொல்லப் பட்டிருக்கிற தோத்திரப் பகுதிகளில் தேவரீரே பாதத்வப்பொருள் என்றுகாப்பந்தித்துகொண்டிருத்தலால், அதனையும், தேவரீரேபரப்பிரம்ஹ மென்பதையும் மஹரிஷியாகிய வியாசரானவர் பிரகாசஞ் செய்தனர். எ-று.

துரோணபர்வத்தில், மைநாக பர்வதத்தின்கண் நாராயணர் செய்த தபோமகிமையானது வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

> వూర్ధ్వబాహుర్మహాతేజా జ్వలనాదిత్యసన్నిభః
> షష్టివర్షసహస్రాణి తావంత్యేవశతానిచ
> వ్యశోషయత్తదాత్మానం వాయుభక్షోంబుజేక్షణః
> అథాపరంతపస్తప్త్వా ద్విస్తతోన్యత్పునర్మహత్
> ద్యావాపృథివ్యోర్వివరం తేజసాసమపూరయత్
> సతేనతపసాతప్తో బ్రహ్మభూతోయదాభవత్
> జానుభ్యామవనింగత్వా కృత్వాశిరసిచాంజలిం
> పద్మాక్షస్తంవిరూపాక్ష మభితుష్టావభక్తిమాన్
> తద్భూతావైభూతకృతోవరేణ్యా గోప్తారోయేభువనస్యాస్యగోపాః
> ప్రవిశ్యేమాంధరణీంయేహ్యరక్షన్ పురాపురాణీతితదేవసృష్టిః
> అభ్యేత్యలోకాయాంతియథాపృథక్త్వంతాభిశ్చైక్యంసంతరయంతిభూయః
> ఏవంవిద్వాన్ ప్రభవంచావ్యయంచత్వత్సంభూతంభవసాయుజ్యమేతి
> భూతంభవద్భావివియత్ప్రిథవ్యంత్వత్సంభూతాస్తుచద్యౌశ్చలోకాః
> భక్తంచమాంభజమానంవహస్వప్రీత్యామాంవైలోకపితామహాయ॥

இ - ள். அந்தநாராயணரானவர் மேல்நோக்கிய கரங்களையுடையவராயும், மகாதேஜோரூபியாய்ச் செல்லுஞ் சூரியனுக்குச்சமமானகாந்தி யுடையவராயும், அறுபத்தாறுயிரத்து அறுநூறுவருடங்கள் வாயுபட்சணம் செய்துகொண்டு தவஞ்செய்தவராகித்தன்னுடைய சரீரத்தைச்சோஷணம் பண்ணினர். அதுவரையில்தான்கோரின தவசித்தி பலிக்காமையால், மறுபடியும் முன்செய்ததவத்துக்கு இரட்டிப்பளவுகாலம் தவத்தில்வருந்திப் பகவானாகியசிவனைச் சந்தோஷிக்கச்செய்து அந்தப்பரமசிவனுடையதேஜசினலே ஆகாசம், பூமிமுதலியவற்றினிடைவெளியைப்பூரித்தார். அன்றியும், அத்தபோமகிமையால் பிரம்ஹசுவரூபியுமானர் என்பதாம். இந்தவிடத்தில் சிவனைத்தியானம்செய்கின்றவராகிய நாராயணரைப் பிரமஹசொரூபி யானுரென்றுரைக்கப்போந்தமை சிவோஹம் என்னும்பாவனையால் அநுபூதிப்பெருஞ் செல்வராயிருத்தல் கொண்டென்க. ததனுசாரமாய் அந்த நாராயணர் அடைய வேண்டியதாய்க் கோரிய பிரம்ஹ

பாவத்தினுடைய அபாவத்தினாலே தவமேற்கொண்டு வருந்திய அவர்பாலிரங்கிச் சிவபெருமான் வெளிப்பட்டபோது அந்த நாராயணரால் பகவானாகிய சிவபெருமான் அநேகவிதமாய்ப் பரப்பிரம்ஹ மென்பது தோன்ற ஸ்தோத்திரம் பண்ணப்பட்டார். எங்ஙனமெனின், முழங் கால்களால் பூமியில் நடந்தவராகிச் சிரசிலே யிரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு விரூபாட்சராகிய சிவபெருமானை நோக்கிப்பின்வருமாறு ஸ்தோத்திரம்பண்ணினர். சகலலோகங்களிலும் பூஜ்யரா யுள்ளவரே! இவ்வுலகத்தில் சிருட்டிகர்த்தாக்களாயும், பரிபாலனகர்த்தாக்களாயு முள்ளவர்கள் தேவரீரிடத்திலே நின்று மன்றோபிறந்தனர்? அவர்கள் இந்தலோகத்தில் பிரவேசித்துச் சகலமானபட்டணங்களையும் தேவரீர் அநுக்கிரகத்தாலன்றோ ரட்சிக்கின்றனர்? இந்தத்தேவர்களுடைய சிருட்டியானது உலகத்தைச்சேர்ந்துதனித்தனியாய்ப் பிரிந்திருந்து மறுபடியும் பிரளயத்தில் அவற்றிற்குரிய காரணபுருஷர்களோடு கூடத் தேவரீரிடத்தி லன்றோலயமாகின்றது? தேவரீரிடத்திலே நின்று முண்டாகிற உற்பத்திலட்சணத்தையறிந்த மஹாத்மாவானவன் தேவரீருடையசாயுஜ்யத்தை அடைகின்றான். எது உம்மிடத்திலே நின்றும் உண்டாச்சுதோ, உண்டாகப் போகிறதோ, அவற்றில்வேறுவேறாய்ப் பிரிக்கும்படியான பிரிவுகளுக்காதாரமா யிருக்கிற உம்மிடத்திலேநின்றுமன்றோ ஈரேழு லோகங்களும் உண்டாயின? அப்படிப்பட்ட லோககர்த்தாவாகிய தேவரீரை அடைந்திருக்கிற பக்தனாகிய என்னை அன்பினாலே அநுக்கிரகிக்கவேண்டும். லோகபிதாமகராயுள்ளதேவரீருக்கு நமஸ்காரம் என்றிந்தப்பிரகாரம் சிவோஹபாவனையால் நாராயணரானவர் பரமசிவனைத் துதித்து சிவபாவத்தையடைந்தார். இதில்பெறப்பட்ட (பிரம்ஹபூதா) என்கிற சப்தமானது சிவனுடைய தன்மையை விளக்கின தன்றிச்சகலமானபிரபஞ்சத்தினுடைய சிருட்டிஸ்திதி சம்ஹாரரூபமாயிருக்கிறபரப்பிரம்ஹத்தன்மையி னிறைந்ததாய் நாராயணராலேசெய்யப்பட்ட ஸ்தோத்திரத்தின் றொடர்ச்சியாகவும் பிரகாசிக்கின்றது. இந்தவிசாரத்தால் சிவபெருமானுடைய பரப்பிரம்ஹத்தன்மையானது வியஞ்சனத்தால் முனிச்சிரேஷ்டராகிய வியாசபகவானால் வர்னிக்கப்பட்டமை வெளிப்பட்டமை காண்க.

—:o:—

## அவதாரிகை.

மேல்நிரூபிக்கப்பட்ட பரம்பொருளான சிவபெருமானிடத்தில் நிருபிக்கும் பதங்களினுடைய பிரயோகங்களினலே செய்யப்பட்ட அந்தப்பரமேசுவர னுடைய தன்மையை யின்னும் பிரவசனம்பண்ணுகிருர்.

## சுலோகம்.

మూలంకృష్ణో బ్రహ్మచబ్రాహ్మణాశ్చ । ఇత్యాదావేవబ్రహ్మభావంమహేశ
పార్థానాంతేనిత్యసంరక్షకస్య । వ్యాసస్తత్రోద్ఘాటయామాసశంభో. ॥௬॥

## மொழிபெயர்ப்பு.

தருமமெனும் விருக்கத்தின் வேராவார் கண்ணனெடுசாருமுண்மைப்
பிரமமுமந்தணருமெனப்பேசியதால்வேதமுனி பிரமமென்ப
தொருமைதவழ்நீயென்றே பாண்டவரைக்காக்கு நலத்தொன்றநாளும்
வருமுறைமாகேச பசுபதிநின்னைவாழ்த்து நலம்வயங்குமன்றே. (சு)

இ-ள். ஈசர்களுக்கெல்லாம் ஈசராயிருப்பவரே! பசுக்களுக்கெல்லம் பதியாயுள்ளவரே! தருமசொரூபமாயுள்ள விருட்சத்தின் வேர்யாரெனில், கிருஷ்ணரும், பிரம்ஹமும், பிராம்ஹணர்களுமென்று வியாசபகவான் கூறியவுண்மையால் நித்தியமாய்ப் பாண்டவர்களைக் காக்குந்தன்மையில் பிரம்ஹமென்னும் பதத்தால் தேவரீருடைய மகிமைகளையே அதிகமாய் அம்முனிவர் பிரகாசப்படுத்தி யிருக்கிருர். எ-று.

பாரதத்தின் ஆரம்பத்தில் (యుధిష్ఠిరోధర్మమయో మహాద్రుమస్స్కంధోర్జునోభీమసేనోస్యశాఖాః। మాద్రీసుతాపుష్పఫలేసమృద్ధే। మూలంకృష్ణోబ్రహ్మచబ్రాహ్మణాశ్చ) என்னும்வாக்கியத்தில் தருமநந்தனரோ தருமசொரூபமாகிய விருட்சமும், அடிமரம் அருச்சுனனும். மரத்தின்கிளைகள் பீமசேனனும், புஷ்பபலங்கள் நகுலசகாதேவர்களும், மரத்தின் வேர், கிருஷ்ணரும், பிரம்ஹமும், பிராம்ஹணர்களுமென்று பெறப்பட்ட வுண்மையால் தருமநந்தனர் விஷயமாக வெளிப்பட்டவி[illegible]ரூபகத்தில் அதன்வேராக ஏர்ப்பட்ட கிருஷ்ணர், பிராம்ஹ[illegible]ர் இவர்களுக்கு வேறுகப் பிரம்ஹபதத்தினல் ஒரு பொருள்[illegible]ரூபிக்கப்பட்டது. கிருஷ்ணருக்கும், பிராமணர்களுக்

கும் மூலத்தன்மை நிரூபிக்கும் அம்சத்தில் இராஜதர்மத்தினால் மறைந்து காணப்படும் தரும நந்தனருடைய க்ஷேமார்த்தமே காரணமாயினமை காண்க. கிருஷ்ணருடைய சகலவிதமான சகாயங்கள்தருமநந்தனருடையராஜ்யபிராப்தியின்பொருட்டுளவென்பதுசர்வசாஸ்திர கடிதமாகையால் கிருஷ்ணர்மூலமாகுந்தன்மை வெளிப்பட்டவாறறிக. பிராம்ஹணர்களோ வெனில், ஜயத்தைத் தரும்படியான ஆசீர்வாதத்தைச் செய்கின்றவர்களாகையால், அன்னோர் காரணராதல் வெளிப்பட்டது. ஆரணியத்தைக் குறித்துத்தருமநந்தனர்போகையில் அவரைப்பிரியாமல்செல்லும்படியானபேர்களாயும், அக்னிஹோத்திர முதலானசிரௌத கர்மங்களோடே கூடினபேர்களாயும், புஜிப்பிப்பதற்கு அசாத்தியமான பெருங்கூட்டமான பேர்களாயுமுள்ள பிராமணர்களுக்குக்காட்டிலுண்டாகிய காய், கிழங்கு, கனி முதலிய வற்றைத் தானே கொண்டுவந்து கொடுக்கும்போது அந்தப்பிராம்ஹணர்கள்தருமநந்தனரைப்பார்த்துப்பின்வருமாறுசொல்லத் தொடங்கினர். ஓய் தருமராஜனே ! நாங்கள் உம்மை அநுசரித்து வருகின்றோம். எங்களுடைய தொடர்ச்சியா லுண்டாகிய புண்ணியத்தினாலும், நாங்கள்செய்யும் ஜபத்தினாலும் உமக்குச்சிவம் துணையாகும்படிச்செய்கின்றோம்என்றுகூறினர். அப்படியேஅந்தப்பிராம்ஹணர்கள் பின்றொடர்ந்து வருந்தன்மையால், பின்னர்சூரியமண்டலத்திலேநின்றும் அட்சயபாத்திரமாகிய தர்மபாத்திரத்தை அடைந்து அவ்விடத்தில் அந்தப்பாத்திரத்தினால் சமர்த்தியாகக்கிடைத்த அன்னத்தைப்பெற்று அந்தப்பிராம்ஹணகளைப் புஜிப்பித்துப் பரித்த விசேஷத்தன்மையால் அந்தத்தருமநந்தனரால்ரட்சிக்கப்பட்டபேர்களாயும், அவருடையஜயத்தையே கோரும்படியான பேர்களாயும், ஸ்நானசந்தி ஜபதபாநுஷ்டான சித்தியடைந்த பேர்களாயும், பத்துவிதமான மோட்ச சொரூபத்தை அறிந்த பேர்களாயும் விளங்கும் அறுபதினாயிரம் பிராம்ஹணர்களால் அத்தருநந்தனர் தாங்கப்பெற்றிருக்கின்றனர் என்று மேலத்தியாயத்தை யடைந்திருக்கிறசங்கியா வசனத்தினாலே பிரகாசிக்கப்பட்டிருக்குமுண்மை யானுங்காண்க.

இனிப் பிரம்ஹபதத்தினாலே பிரதிபாதிக்கப்ப[illegible] பொருளொன்று மூலமாகுந்தன்மையைப் பரியாலோசிககில் அதனால்

பாண்டவ ராஜ்ய லாபமான பிராப்தியான காரணம் வெளிப்பட வேண்டுமாயிற்று. அது யாதென்னும் விசாரத்தில் வேதம், தபசு, என்பவை பிரம்ஹபதத்துக்குவெளிப்பட்ட அர்த்தரூபங்கள் தல்புற்றி அவற்றின் காரியமாகிய தர்மாநுஷ்டான ஞானதிசய வழியினுலும், அபூர்வமென்கிற பலத்தினுடைய வழியினுலும், அவர்களுக்கு இராஜ்யபிராப்தியைச் செய்துவைக்குந் தன்மைத்தாலோவெனின், சேதனர்களாகிய கிருஷ்ணரும், பிராம்ஹணருமாகிய இவர்கள்மத்தியில் அசேதனமான தர்மாநுஷ்டானத்தையும், அபூர்வத்தையும், பிரம்ஹ பதத்துக்குப் பொருளாய்ப் படிக்குந்தன்மை அசப்யமாதல்காண்க. ஆகவே, சின்மாத்திரமாயுள்ள பரமசிவனே அந்தவிடத்தில் பிரம்ஹ பதத்தினுலே சொல்லப்பட்டவராய் வேத்யராகின்றனர். தர்மம், புண்ணியமுதலியவற்றையபேக்ஷித்து அதிகமாய்ச்சத்ரும்சஹாரமுதலியஜயத்தையும், பாக்கியத்தையுங் கொடுக்கும்படியான வழியால், அந்தத் தருமராஜனுக்குக்கிடைக்கும் இராஜ்யபிராப்திக்குப்பிரம்ஹ பதத்தினுலே சொல்லப்பட்டவர் பரமசிவனேயென்று மூலகாரணம் பாரதம் ஆரணியபர்வத்தில் கிராதார்ச்சுன தடஸ்தப்பிரஸ்தாபத்திலும், துரோணபர்வத்தில் கைலாசயாத்திராசந்தர்ப்பமான அநந்தஸ்தாநங்களிலும், ஸௌஷுப்திகபர்வத்திலும், அசுவமேதபர்வத்திலும், இன்னும் அநேகவிடங்களிலும், சதருத்ரியத்திலும், அங்கங்கேநன்ருய்ப்படிக்கப்பட்டிருக்கும் பிரசித்தம் விஸ்தாரமாகையால் அவற்றின் விவரணங்களை "பிரம்ஹதர்க்கஸ்தவம்" என்னும்சிவபராம்யகிரந்தத்தில் உதகரித்திருத்தல் ஏராளமாய்க்கண்டுணர்க. இந்த விசாரத்தால் பிரம்ஹமென்று மேலேகூறப்பட்ட பொருள் பரமசிவத்தையன்றிக் கிருஷ்ணருக்கே விசேஷமென்ருவது, வேறுளந்தஹேயாபிப்பிராய சித்தியுடையதென்ருவது கூறத்துணிவது நிரஸ்தமாதல்காண்க,

## அவதாரிகை.

ஸ்ரீ கிருஷ்ணரைக் காட்டிலும் மிகுதியாய்ப் பாண்டவர்களைக் காக்குந்தன்மையில்பிரகாசத்தைப்பெற்றுவிளங்கும் ஸ்ரீசிவபெருமானுக்கு மூலதத்வநிரூபணத்திலே கிரகிக்கும்படியான சுபாவமான அவசியபாவமாகையால், பிரம்ஹ விஷ்ணுக்களுடைய சிருட்டிப் பிரளயகர்த்துருத்தும் சொல்லும்படியானமார்க்கத்தில் அப்பரமேசுவரனுக்குப் பரப்பிரம்ஹத்தன்மையான அபிவியக்தியை வெளிப்படுத்துகிறார்.

## சுலோகம்.

బ్రహ్మావిష్ణుశ్శంకరశ్చేతిదేవాః | కర్తారోయేసర్గరక్షాలయానాం
తేషాంసృష్టింసంహృతించత్వదిచ్ఛా | ధీనామూచేద్యోతయన్బ్రహ్మతత్త్వం॥ ௨ ॥

## மொழிபெயர்ப்பு.

பங்கயனிந்திரைகேள்வனுருத்திரனென்போர் தத்தம்பண்பிற்கேய்ந்த
துங்கமிகுசிட்டிதிதிசங்காரஞ்செய்யுமருள்சேரப்பெற்றோ
ரங்கவரைப்படைத்து மளித்துந்துடைத்து மருளுநினதாண்மைநாட்டற்
கெங்கருணைய நின்றனிச்சையென வியாதமுனியிசைத்தானன்றே. (எ)

இ-ள். பிரமன், விஷ்ணு, உருத்திரர் என்னுமிவர்கள் சிருட்டி, திதி, சங்காரம் என்னுங் கிருத்தியகர்த்தரா யுள்ளவர்கள். அன்னோரைச் சிருட்டித்தலும், சங்கரித்தலுமாகியபிரம்ஹதத்துவத்தைப் பிரகாசப் படுத்தும்பொருட்டுத்திரிமூர்த்திகளுடையசிருட்டி ஸ்திதிலயங்களைத் தேவரீருடைய இச்சைக்கதீனமாகவே வியாசர்கூறினர். எ-று.

சிவனுக்குத் திரிமூர்த்திகளைச் சிருட்டிக்குந் தன்மையானது அநுசாசநீகபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

సఏషభగవానీశ । స్సర్వకర్తాదిరవ్యయః
సర్వతత్త్వవిధానజ్ఞః । ప్రధానపురుషేశ్వరః
సోసృజద్దక్షిణాదంగా । ద్బ్రహ్మాణంలోకసంభవం
వామపార్శ్వాత్తథావిష్ణుం । లోకరక్షార్థమీశ్వరః
యుగాన్తేచైవసంప్రాప్తే । రుద్రంప్రభురథాసృజత్॥

இ-ள். அப்படிப்பட்ட இந்தப்பகவானனவர் சர்வகர்த்தாவாயும், சர்வ தத்துவங்களுக்கும் முதன்மையாயும், அழிவில்லாதவராயும், சகலதத்வங்களுடைய நிர்மாணத்தை அறிந்தவராயும், பிரதானபுருஷராயும் விளங்கினவராய்த் தமது வலதுபாரிசத்திலேநின்றும் லோக சிருட்டியைச் செய்யும்படியான பிரம்ஹாவைச் சிருட்டித்தார். அப்படியே வாமபாரிசத்திலேநின்றும் லோகரக்ஷணார்த்தமாய் விஷ்ணுவைச்சிருட்டித்தார். பிரளயகால சம்ஹாரார்த்தமாய் உருத்திரனைச் சிருட்டித்தார். எ-று.

அவர்களுடையஆபதோத்தாரமுதலியகாரியங்களினாலே சிவனுக்குத் திரிமூர்த்திகளைச் சம்ரக்ஷணை பண்ணும்படியான தன்மையானது சாந்திபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

యంవిష్ణురుద్రశ్శంభుశ్చ। బ్రహ్మాలోకపితామహః
స్తువంతివివిధైస్తోత్రైః। దేవదేవంమహేశ్వరం
తమర్చయంతియేశశ్వ।ద్దుర్గాణ్యతితరంతితే॥

இ-ள். தேவதேவோத்தமனும், மகேசுவரனுமாகிய யாதொரு பரமசிவனை விஷ்ணு, இந்திரன், உருத்திரன், லோக பிதாமகனுகிய பிரமன் முதலியவர்கள் நாநாவிதமாயிருக்கிற ஸ்தோத்திரங்களினுலே துதிசெய்துகொண்டிருக்கிறூர்களோ, இவ்வுலகத்தில் யாவரானுல் அந்தப்பரமசிவனை அர்ச்சிக்கின்றூர்களோ, அவர்கள் தாண்டக்கூடாத ஆபத்துக்களைத் தாண்டாநிற்பர். எ-று.

இந்த விடத்தில் சிவாராதனத்தால் தாண்டற்கரிய ஆபத்துக்களுக்கு நிவிர்த்தியுண்டாமென்று நிச்சயம் வெளிப்பட்டமையால், ததிதரசம்பந்தமான ஆராதனங்களால் மேலிஷ்டசித்தியுண்டாவது கஷ்டதரமென்பது வெளிப்பட்டது. ஆகவே, ஸ்தோத்திரங்களினுலே சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கிற பகவானுகிய சிவனுக்கு ரக்ஷிக்குந் தன்மையைவர்ணிப்பது இஷ்டாபத்தியாய்முடிந்தது. இனித் திரிமூர்த்திகள்மூவரைச் சம்ஹரிக்கின்றவரும் அவரோயென்பதைச் சாந்திபர்வவசனத்தாற்காண்க.

ఈశానశ్చేతనఃకర్తా। పురుషఃకారణంశివః
విష్ణుబ్రహ్మశశిసూర్య। శక్రోదేవాశ్చసాన్వయాః
సృజ్యంతేగ్రస్యతేచైవ। తమోభూతమిదంయదా
అప్రజ్ఞాతంజగత్సర్వం। తదాహ్యేకోమహేశ్వరః॥

இ-ள். ஈசானரும், உலகத்தைப்பிராணமுடையதாய்ச் செய்கின்றவரும், சமஸ்தத்தையும் உண்டுபண்ணுகின்றவரும், சமஸ்தபிராணிபூதங்களிலும்வசிக்கின்றவரும், ஜகத்காரணருமாகிய அந்தப்பரமேசுவரர்; விஷ்ணு, பிரமன், சந்திரன், சூரியன், இந்திரன், பரிவாரங்களாகிய மற்றைத்தேவர்க்களையுஞ் சிருட்டித்தும், ரக்ஷித்தும், சம்ஹரித்தும் வருவதினுலேயே உலகமெங்கும் இருண்மூடித் தமோமாத்திராவசேஷமாக விருக்குமந்த வேளையில் ஆதி யந்த சூனியராகிய அவரொருவரே நாசமின்றி யிருக்கின்றூர். எ-று.

இந்த விடத்தில் சிருட்டியையும், சம்ஹாரத்தையு மாத்திரமே சொல்லியிருப்பினும், சகாரத்தினுலே லோகரக்ஷணமும் சூசிக்கப்பட்டது. இப்படித் திரிமூர்த்திகளைச் சிருட்டித்தும், ரக்ஷித்தும், சம

ஹரித்தும் வருந்தன்மைகொண்டே கைமுதிக்நியாயத்தினலே அப்பரமேசுவரனுக்குச் சுருதிநிஷ்டமானஜகத்கர்த்திருத்வம்சித்தித்தது. "తదీయతో వాఇమానిభూతాని" என்றுபெறப்பட்ட பிரம்ஹமானது ஸ்ரீபரசிவனேயென்பது வெளிப்படை. இப்படித்தோன்றிய அர்த்தத்தையே மேல்வெளிப்படுத்தியவாருயிற்று. (ద్యోతయన్నిరి) என்று சகாரப்பிரத்யேயம் வந்தமையுங்காண்க.

---

## அவதாரிகை.

ஒவ்வோரிடங்களில் ஸ்ரீமஹாபாரதத்தில் சிவனுக்குப்பிர்ம்ஹவிஷ்ணுக்களைக்காட்டிலும் அபகர்ஷம் சம்பவித்திருப்பதாகப் புலப்படுவதென்னையென்று சங்கித்துப் பரியாலோசிக்கின்ருர்.

## சுலோகம்.

విశాలాక్షః స్థాణుర్ద్రుహిణ తనయాస్సంహరణకృత్
సరోజాక్షక్రోధప్రభవ ఇతివై శేషికపదం
విభూతిత్వజ్ఞస్త్రైకిమపినిహితంనాదనియతం
నికర్షోక్తిస్తాభ్యాంభవత ఇతిబుద్ధింనిరసితుం॥ ౮॥

## மொழிபெயர்ப்பு.

போற்றுவிசாலாட்சர்புகருணுவெனுமுருத்திரர்நின்புடைவிபூதி
மாற்றமுணராரன்னவுருத்திரர்பங்கயனரிக்குமைந்தராகுந்
தேற்றமுனியுரைப்படியுந்தேராதுநின்னிடத்தேதீமைகூறற்
காற்றன்மிகவெழுவரொமதையவவரவலமதியகற்றுவாமே. (அ)

இ-ள். எமது நாதரே! தேவரீருடைய விபூதியாயுள்ள விசாலாக்ஷரும், ஸ்தாணுருத்ரருமாகியவர் பிரமனிடத்திருந்தும், விஷ்ணுவினதுகோபத்தை யதிட்டித்தும் பிறந்தாரென்றுவியாதமுனிவர்கூறியதையறியாது, தேவரீர்விஷயத்தில் அபகர்ஷங் கூறுவாருடைய நிகர்ஷோக்தியையாம் மறுத்துரைப்பாம். எ-று.

இதனல், திரிமூர்த்திகட்குக் காரணமானவராயும், மாயைக்கு ஆதாரமாயிருக்கிற சகுணப்பிரம்ஹ ரூபியாயும் விளங்கும் ஸ்ரீசாம்பமூர்த்தியினுடைய ஐசுவரிய விசேஷரூபியாயிருக்கிறவன் உருத்திரன் என்றுவெளிப்பட்டது. எங்ஙனமெனின், சம்ஹார ருத்ரானவர் லோகசிருட்டிநிமித்தமாகவும், லோகரக்ஷணர்த்தமாகவும் பிரம்ஹாவினிடத்திலேநின்றும் தன்னுடைய இச்சையினலே பிராதுர்ப்பவமா

ஞர்எனவும், அந்தமூர்த்தியினுடைய அவதாரரூபமானது அவாந்தரமான கல்பங்களில் சம்ஹாரம் பண்ணுகிறநிமித்தமாய் விஷ்ணுவினுடைய கோபத்தையதிட்டித்துத் தன்னுடையஇச்சையினுலே பிராதுர்ப்பவஞ்செய்ததாகவும் ஏர்ப்பட்டது. சம்ஹாரமூர்த்தியினுடைய அவதாரரூபமானவுருத்திரனொருவனேயன்றி இன்னுமளவிறந்த வுருத்திரர்கள் நீலலோகிதர், காபாலி இத்தியாதிய பெயர்களால் பிரகாசித்துக்கொண் டிருப்பவர்களாய் ஓர்காலத்தில் பிரம்ஹாவினுடைய அங்கத்திலேநின்றும் பிரகாசித்தவரான ஸ்ரீருத்ரமூர்த்தியினுடைய பெருமையான அவதாரங்களாய்ப் பாரதத்திலேதானே யேராளமாய்ப் படிக்கப்பட்டிருக்கின்றது.

అనాదినిధనోదేవ । శ్చైతన్యాదిసమన్వితః
జ్ఞానానిచవశేయస్య । తారకాదీన్యశేషతః
అణిమాదిగుణోపేత । మైశ్వర్యంనచకృత్రిమం
సృష్ట్యర్థంబ్రహ్మణఃపుత్రో । లలాటాదుత్థితఃప్రభుః ॥

இ-ள். ஆதியந்தசூனியராயும், விசாலமூர்த்தியாயும், சைதன்ய முதலியவைகளோடு கூடியனவராயும், தாரகமென்றுசொல்லும் சாஸ்திரங்களைத் தன்வசமாய் வைத்துக்கொண்டிருக்கிறவராயும், அணிமா முதலிய குணங்களோடே கூடிய நிஜமானஐசுவரியம் படைத்தவராயும், லோகசிருஷ்டியர்த்தமாய்ப் பிரம்ஹாவினுடைய புத்திரனுகப்பிரபுவாகியவுருத்திரர் நெற்றியிலேநின்றும்உண்டாயினர். எ-று.

கூர்மகல்பத்தில், (హరిఃక్రోధభవఃకౌర్త్యో బ్రహ్మచారీవ్యవస్థితః । వద్మాక్షః స్తపసాశ్రేష్ఠో బలవాన్ నీలలోహితః) என்னும் வசனத்தால் விஷ்ணுவினுடைய கோபத்தினின்றும் உண்டானவர் பிரமசாரியாயிருக்கின்றனர். அவருடையபெயர் பத்மாக்ஷநீலலோகிதர். அவர்தவத்தினுலே சிரேஷ்டராயும், பலவானுயுமிருப்பவர். அவரே வடக்குங் கிழக்குங்கூடியமூலையிலிருக்கும் ஈசானமூர்த்தியாயுள்ளவர்என்று பெறப்பட்டது. இன்னும்பிரம்ஹாவைப்பார்த்துச் சிவன்சொல்லுகிறவசனம்.

అహంచభవతోవక్త్రా । త్కల్పాంతేఘోరరూపధృత్ ।
శూలపాణిర్భవిష్యామి । క్రోధజస్తవపుత్రకః ॥

இ-ள். நான் உமது முகத்திலேநின்றும் ஓரானொருகற்பத்தின் முடிவில்பயங்கரமான ரூபதாரியாகவும், சூலபாணியாகவும் உம்முடைய கோபத்திலேநின்று முண்டாகிறபுத்திரனுகப்போகிறேன். எ-று.

இப்படிநீலலோஹிதருடையபிரஸ்தாபங்கள் அநந்தமுகத்திற்படிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வுருத்திரர் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்கள் மஹாகைலாசத்திற்குச் சென்றகாலேயில் அவ்விடத்தில் சிவபெருமானுடையபாரிசத்திலிருந்ததாகவும் ஸ்ரீமஹாபாரதத்திலேதானேவர்னிக்கப்பட்டடிருக்கிறது.

తతఃపార్శ్వేవృషాంకస్య। బ్రహ్మచారీవ్యవస్థితః
పద్మాక్షస్తపసాంశ్రేష్ఠో। బలవాన్నీలలోహితః॥

இ-ள். விருஷபாரூடராகிய சிவனுடைய பாரிசத்தில் பிரம்ஹசாரியாயிருந்து கொண்டிருப்பவர் தவத்தினாலே சிரேஷ்டராய்விளங்கும் பத்மாக்ஷரென்பவர். அவர்பலவானும், நீலலோகிதருமாவர். எ-று.

அவரே லோகபாலருத்ரராகக்கிழக்கு வடக்குங் கூடியதிக்கில் வாசம்பண்ணுகிறவராகக் கூர்மபுராணத்தில் வர்னிக்கப்பட்டனர்.

తత్రేశానస్యభవనం|రుద్రాష్టతనోశ్శుభం
గణేశ్వరస్యవిపులం|తత్రాస్తేసగణైర్వృతః॥

இ-ள். அந்தவிடத்தில் சாட்சாத்மூலகாரணமான ஸ்ரீருத்ரமூர்த்தியினாலே கலந்துகொண்டிருக்கிற சரீரத்தையுடைய ஈசானர்வசிக்கும் மங்களகரமானவீடானது விளங்காநின்றது. கணங்களால் சூழப்பட்ட விஸ்தாரமானவீடொன்றும் அந்தவிடத்திலிருக்கின்றது. எ-று.

இப்படி ருத்ராவிர்ப்பவம் வெளிப்படுமாற்றால், பிரம்ஹாவினுடைய அங்கத்தினின்று முண்டான வுருத்திரருக்கு ஸ்தாணு விசாலாட்சர் என்னும் வைசேஷிகநாமங்கள் வெளிப்பட் டிருக்கின்றன. பிரம்ஹாவினுடைய பிரார்த்தனையினாலே சிருட்டிநிமித்தமாய் அவர் முகத்திற்றோன்றிய வுருத்திரரானவர் மூப்புமரணமில்லாதவர்களாகவும், தனக்குச் சமானர்களாகவும் அளவிறந்த வுருத்திரர்களைச்சிருட்டித்தார். அப்போது பிரம்ஹதேவர் மூப்புமரணங்களோடுகூடியபேர்களைச் சிருட்டிபண்ணும் என்றுசொன்னார். அந்தவாக்கியத்தை ஸ்தாணுவிசாலாக்ஷர்கேட்டு இவ்விதசிருட்டி யென்னால்செய்யமுடியாதுஎன்றுகூறினர். அதைக்கேட்ட பிரம்ஹதேவர் அந்த ருத்ரசிருட்டியை நிறுத்திவிட்டார். அப்போது அந்தருத்ரமூர்த்திக்கு சிர்வியாபாரசித்தி யேர்ப்பட்டமையால் அவரிடத்தில் ஸ்தாணுசப்தப்பிரவர்த்திதந்நிமித்தமாகப்புராணங்களிலேகாண்பிக்கப்பட்டது.

స్వాత్మజైరేవతైర్ఋుద్రై । ర్నివృత్తాత్మావ్యతిష్ఠత
స్థాణుత్వం తేనతస్యాసీ । ద్దేవదేవస్యశూలినః॥

இ-ள். தன்னிடத்திலேநின்று முண்டாயிருக்கும் அந்த ருத்ரர்களோடேகூட நிவிர்த்திக்கப்பட்ட மனசுடையவராய் அந்தஸ்தாணுருத்ரரானவர் அப்படி நிர்வியாபாரமா யிருக்கிறதினாலே தேவதேவராயும், சூலபாணியாயுமிருக்கிற உருத்திரருக்கு ஸ்தாணுவாயிருக்குந் தன்மையுண்டாச்சுது. எ-று.

తతఃప్రభృతివిశ్వాత్మా । నప్రసూతేశుభాఃప్రజాః
స్థాణువన్నిశ్చలోయస్మా । త్స్థాణురేవతతస్మృతః॥

இ-ள். சகத்ரூபியாயிருக்கிற அந்த ஸ்தாணுருத்ரரானவர் ஸ்தாணுவைப்போல அசைவற்றவராய் மூப்புமரணமில்லாத பிரசைகளைச் சிருட்டியாதிருந்தார். எந்தக்காரணத்தினால் ஸ்தாணுவைப்போல்அசைவற்றவரா யிருக்கின்றாரோ, அதுகாரணத்தினாலேயே ஸ்தாணுருத்ரரென்று சொல்லப்பட்டார். எ-று.

அவருக்கே விசாலாக்ஷரென்னும் நாமமுளது என்றறிக. ஸ்ரீ மஹாபாரதத்தில் இராஜதர்மப் பிரசம்சையில் பிரம்ஹாவினாலேசொல்லப்பட்ட நீதிசாஸ்திரத்தைப்புகழ்ந்து அதனைச் சங்கரர் கிரகித்தாரென்று பெறப்பட்டது.

తతస్తాంభగవాన్నీతిం । పూర్వజగ్రాహశంకరః
బహురూపోవిశాలాక్షః । శ్శివస్థాణురుమాపతిః
సఏవస్సర్వభూతాత్మా । మహాదేవస్సనాతనః
అసంఖ్యాతసహస్రాణాం । రుద్రాణాంస్థానమవ్యయం
యోగానామాయుషోహ్యేషాం । విజ్ఞాయభగవాన్శివః
సంచిక్షేపతతశ్శాస్త్రం । మహార్థంబ్రహ్మణాకృతం
వైశాలాక్షమితిప్రోక్తం । తదింద్రఃప్రత్యపద్యత॥

இ-ள். வெகுரூபமுள்ளவராயும், உமைக்கு நாயகராயும், சர்வபூதாத்மகராயும் விளங்கும் மஹாதேவரென்றுசொல்லப்படும் இந்த வுருத்திரமூர்த்திக்கே விசாலாட்சரென்றும், ஸ்தாணுவென்றும் பெயர்களாம். இந்த வுருத்திரரானவர் எண்ணிக்கையில்லாத ஆயிரமாயிரமாயிருக்கும் உருத்திரர்களுக்கு இருப்பிடமாகவும், அழிவில்லாதவராகவும் விளங்குகின்றவர். இவருக்கு ஆயிரமாயிரமா யிருக்கும் யுகங்கள் ஆயுசுகளாக உண்டாயின. இப்பேர்ப்பட்டவிசாலாட்ச ருத்

ரர் பிரம்ஹாவினுற்செய்யப்பட்ட நீதிசாத்திரங்களைத். தெரிந்துகொண்டு அதனைச் சுருக்கமாய்ச்செய்தனர். அதற்குவைசாலாட்சமென்றுபெயர். இந்தஸ்தாணுபதத்தினுலே சொல்லப்பட்டஅந்தருத்ரரிடத்தில் விலாட்சமென்கிறபதமானது பிரயோகிக்கப்பட்டபடியால், அவரால்செய்யப்பட்ட நீதிசாஸ்திரத்திலும் வைசாலாட்சமென்னும் பதமானது படிக்கப்பட்டது. அந்தவைசாலாட்சபத கீர்த்தனத்தினுலே சொல்லப்பட்டவர் இந்தஸ்தாணு விசாலாட்சபதத்தினுலேசொல்லப்பட்ட உருதிரரேயாம். இவ்வுண்மை விசாரமின்றி இவரையே பாரத முதலிய வுத்கிரந்தங்களிலும், சைவசாத்திரங்களிலும், சர்வோத்தமராகப் பிரதிபாதித் திருக்கின்றதெனமயங்கி இவருக்கும், அவற்றுள் உள்ளபடியே பிரதிபாதித்திருக்குந் துரிய சிவத்துக்குமுள்ள தாரதம்யங்களையறியாது அகங்கரித்துளைப்பாராசங்கையென்னும் பேயையீண்டுத் துரத்தலாயிற்று. ஸ்ரீமஹாபாரதத்தில் அந்தவுருத்திரருக்கு ஸ்ரீபரசிவப்பிரபுவைச் சேவித்துக்கொண்டிருக்குஞ் சிவகணங்களிலொருவராயிருக்குந் தன்மை படிக்கப்பட்டிருப்பதால், துராத்மாக்களைப் பிடித்தாட்டுஞ் சமிசயங்களாகிய பைசாசங்களைத் தலைவிரித்தோடச்செய்தனமென்றறிக.

యత్రభూతపతిస్సృష్ట్వా | సర్వలోకాన్మహేశ్వరః
ఉపాస్యతేతిగ్మతేజా | వృతోభూతైస్సహస్రశః॥

என்னும்வசனத்தால் பூதபதியாகவும், மகேசுவரராகவு மிருக்கிறவர் சகலலோகங்களையுஞ் சிருட்டித்துவிட்டு உக்கிரமான தேஜசோடேகூடினவராயும், ஆயிரமாயிரமாயிருக்கும் பூதகணங்களாலே யுபாசிக்கப்பட்டவராயும் விளங்குந்தன்மைவெளிப்பட்டு அவருடைய சந்நிதானமாகிய இருப்பிடம் மைநாகபர்வதமென்பது பின்வாக்கியத்தாற் பெறப்பட்டமைகாண்க.

నరనారాయణౌబ్రహ్మా | ధర్మస్థాణుశ్చపంచమః
ఉపాసతేయత్రపరం | సహస్రయుగపర్యయే॥

இ-ள். நரநாராயணர்கள், பிரம்ஹா, இயமன், ஸ்தாணுருத்ரர் ஆகியஐவரும் ஆயிரயுகபரியந்தமாய்ப பரமசிவனையுபாசித்துக்கொண்டிருக்கிறார்கள். எ-று.

அந்தப் பரமேசுவரனையுபாசிப்பவர்களில் இவர்களையே பெரியவர்களாகக் கணித்திருக்கின்றது.

ஸ்ரீமஹாபாரதம், இராஜதர்மபிரஸ்தாபத்தில்,

భూయస్సభగవాన్ ధ్యాత్వా చిరంశూలవరాయుధః
తస్యతస్యనికాయస్య చకారైకైకమీశ్వరం
దేవానామధిపంచక్రే దేవంశతతేక్షణం
రుద్రాణామపిచేశానం గోప్తారంవిదధేప్రభుః
మహాదేవంమహాత్మానం విశాలాక్షంసనాతనం॥

இ-ள். சிரேஷ்டமான சூலாயுதம் படைத்த பகவானுகிய சிவபெருமானுனவர் இந்த வுருத்திரகணங்களுக்குள்ளே யொவ்வொரு ருத்ரமூர்த்தியை யொவ்வோரிடங்களில் நாயகர்களாக ஏர்ப்பாடு செய்தனர். ஆயிரங்கண்படைத்தவனைத் தேவர்களுக்கு எஜமானனுக வேர்ப்படுத்தினுர். மஹாதேவராகவும், மஹாத்மாவாகவும் விளங்கும் விசாலாட்சருத்ரனை உருத்திரர்களுக்கெல்லாம் இரக்ஷகராக வேர்ப்படுத்தினுர். எ-று.

பரமசிவனுடைய ஏவலுக்கு யோக்யர்களாயிருக்கிற வுருத்திரகணங்களி லிந்த விசாலாட்சருத்ரருக்கு அந்தப்பரமசிவனில் வேருகுந்தன்மை யிலக்கணமாகவேர்ப்பட்டது. இந்தப்பிரகாரம் சிருட்டிக்கிற நிமித்தமாய்ப் பிரம்ஹாவினுடைய லலாடத்திலே நின்றும் உற்பவித்திருக்கிற அந்தவிசாலாட்சருத்ரனையநுசரித்து ஸ்ரீமஹாபாரதத்திற் பெறப்பட்டவசனம் வருமாறு (బ్రహ్మాసురగురు స్థాణుః మనుశ్చపరమేష్ఠికః) என்னும் ஆரம்பத்தையுடைய வாக்கியத்தில் பிரம்ஹா, பிருகஸ்பதி, ஸ்தாணுருத்ரன், மநு, பரமேஷ்டி இத்யாதி யிருபத்தொருபேர்க ளுண்டானுர்களெனவும், அவர்கள் பிரஜாபதிகளென்று சொல்லப்பட்டவர்களெனவும் பெறப்பட்டது. இங்கே பிரஜாபதிகளிடங்களிலே பரிகணம் செய்யப்பட்டது. அந்தஸ்தாணுருத்ரருக்கே பிரம்ஹசபையில் பிரம்ஹாவின் அநுசரணத்திஞலே இருப்பானது ஆதிபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

తత్రవిష్ణుమహాదేవ స్తత్రాగ్నివాయునాసహ
ఋషయస్సర్వఏవైతే పితామహముపాసతే॥

இ-ள். அந்தப்பிரம்ஹசபையிலே விஷ்ணு, மஹாதேவர், அக்னி, வாயு, ரிஷிகள்முதலானவர்கள் பிரம்ஹாவையுபாசித்துக் கொண் டிருக்கின்ருர்கள். எ-று.

இதுவும் ஸ்தாணுருத்ரர் விஷயமென்றே யறிந்திடுக.

பாரதம் ஆதிபர்வத்தில், பிரம்ஹசபையில் தேவர்க்களைப் பிரதட்சிணஞ்செய்து வருகின்ற திலோத்தமையை நான்கு பக்கங்களிலும் பார்க்கும்பொருட்டு அந்தஸ்தாணுருத்ரர் நான்கு பக்கங்களிலும் நாலுமுகங்களை யுண்டாக்கிக்கொண்டனர் என்று கூறுமர்த்தத்தை (ఏవంచతుర్ముఖస్థాణుః మహాదేవో భవత్పురా) என்னும் வசனத்தால் மஹாதேவராகிய ஸ்தாணுவானவர் நாலுமுகம் படைத்தவரானார் என்று விளக்கியதனாற் காண்க.

இன்னும், துரோணபர்வத்தில் பிரம்ஹாவைக் குறித்துச் சிவன் சொல்லுகிற வசனம் வருமாறு.

“భవతాహినియుక్తోహం ప్రజానాంపరిపాలనే”

இ-ள். உம்மாலே பிரஜைகளினுடைய பரிபாலனத்தின்பொருட்டு நான் ஏர்ப்படுத்தப்பட்டேன் எ-று. இதிற் பெறப்பட்டதும் ஸ்தாணுருத்திர விஷயமென்பதே சர்வசம்பிரதிபன்னமாதலறிக. இனிப்பாரதம்மோக்ஷதர்மத்தில் நாராயணர் கூறியவசனத்தையோசிப்பாம். “ఏతౌద్వౌవిబుధశ్రేష్ఠౌ ప్రసాదక్రోధజౌమమ। మయాదర్శితపంథానౌ సృష్టిసంహారకారకౌ” என்னுமிந்தவாக்கியத்தைப் பரியாலோசிக்கில் தேவர்ளுக்குள் சிரேஷ்டர்களாயுள்ள விவ்விருவரும் என்னுடைய அநுகிரகத்தாற் கோபத்திலேநின்றும் பிறந்தவர்களும், என்னாலே காண்பிக்கப்பட்ட மார்க்கங்களிலேசிருட்டியும், சங்காரமுஞ் செய்பவர்களுமா யிருக்கின்றார்களென்று பெறப்படுகின்றது. இந்தவசனத்தில் கோபத்திலேநின்றும் பிறந்தவனென்று சூசிப்பித்தவிசேஷணத்தால் அவருளெண்ணப்படுமுருத்திரர்விபூதியாகவே கொள்ளப்பட்டனர். இந்தப்பிரகாரமே மற்றோரிடத்திலும், அன்னியகிரந்தாந்தரங்களிலும் சிவநிகர்ஷமாகத் தோன்றுகிறசந்தர்ப்பங்கள்வருந்தோறும் சிவநாமத்தைவகித்துச் சிவமுத்திரைசிவரூபங்களைத் தாங்கிச் சிவவிபூதிகளாயுள்ள ஸ்தாணுவிசாலாட்சாதி ருத்ரகணங்க ளென்பதைக் காட்டவேண்டிப் பிரம்ஹபுத்திரன், விஷ்ணுகோபஜன் என்னும் விசேஷணங்களே பிரயோகிக்கப்பட்டன வென்றறிக. மேல் விசாரத்தால் பாரதத்திலெவ்வோரிடங்களில் சிவாபர்ஷமாகத் தோன்றும்படியுண்டாயிருக்கும் பிரயோகங்களுக்குக் கதி யேர்ப்பட்டமையால், அவற்றால் பரசிவ மகிமைக்குப் பாதகமொன்று மில்லாமைதெளிக.

எந்தவிடத்தி லன்னவைசேஷிக பதங்களில்லையோ அங்கேசாட்சாத் சிவவிஷயமென்றே கொள்ளப்படுமென்க. எங்ஙனமெனின், பஞ்சேந்ரோபாக்கியானத்தில் அந்தப் பஞ்சேந்திரங்களை அசுராவதாரரூபமான கர்னன், துரியோதனன் முதலியபேர்களுடைய சம்ஹாரார்த்தமாய் மநுஷ்ய லோகத்திற் பரவுங்கோ ளென்று ஆக்ஞாபிக்கும்படியான சிவனுடைய அம்சத்தினாலே நாராயணனுமவதரித்துப் பாண்டவர்களுக்குச் சகாயத்தைச்செய்தான் என்று பெறப்பட்டமையே சாலும். இவ்வுண்மை பின் சுலோகத்தாலும் விரிக்கப்படுதல் காண்க.

## அவதாரிகை.

மேலெடுத்துக் கொண்டபடிக்குப் பின்னுங்கதி சொல்லுகின்றார்.

## சுலோகம்.

యత్రేదృశం నాస్తి విభూతిరుద్రతా। విజ్ఞాపకం నామ విశేషకం పదం
స్వాపి స్వధర్మగ్రహమాన వైశసా। త్సర్వేశ్వరం త్వాన్న నికృష్టగీస్స్పృశేత్ ॥౬॥

## மொழிபெயர்ப்பு.

நன்மைகொளும்விபூதியுருத்தின்றன்மைஞாபகமாகவில்விசேட
மின்மையெவணுமாண்டுநிகழுமிழிபுரையன்றேனெய்தலாகுந்
தன்மியிடம்பொருள்காணத்தக்கபிரமாணமிலாத்தன்மையாலே
யென்மணியேசர்வேசனென்னுமுனையதுதொடராதென்றுந்தானே. (௬)

இ - ள். வாராய்நாதனே! எந்தவிடத்தில் விபூதிருத்ரனுடைய தன்மையை ஞாபகப்படுத்தும்படியான விசேஷபதமில்லையோ, அந்தவிடத்தில் நிகிருஷ்டமாய்ச் சொல்லும் வாக்கானது அவனுக்குத் தர்மியாயுள்ள பொருளிடங் கிரகணஞ் செய்யப்பிரமாணங் கிடையாமையால் அச்சர்வேசுவர்ராகியதேவரீரை அது தொடுவதில்லை எ - று.

ஸ்ரீமக பாரதத்தில் சாம்பமூர்த்தியானவர் திரிமூர்த்திகளுக்கப்பாறப்பட்டவரும், திரிமூர்த்திகளைப் படைத்தவரும், சராசரமாயுள்ள சகலபிரபஞ்சங்களையுஞ்சிருட்டிசெய்பவரும், ஸ்திதிசம்ஹாரங்களைச் செய்பவரும், யாவராலும் சேவ்யமானராயுள்ள

வருமாகப் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றனர். அன்றியும், பாரத சேஷமாகிய ஹரிவம்சத்தில் பண்டிசவாரியினால் கொண்டாடப் படும் நந்தகோபாலனாலே தன்மகனை கிருஷ்ணனுடைய ரக்ஷணையின் பொருட்டுச் சொல்லப்பட்ட கவசத்திலும் பரதத்வப் பொருளென நிரூபிக்கப்பட்டனர்.

విష్ణుస్త్వేపూర్వతః పాతు రుద్రోరక్షతుదక్షిణం
బ్రహ్మాచపశ్చిమంపాయ స్కందోరక్షత్వథోత్తరం
ఉపరిష్టాత్తథాసూర్యః పాత్వధశ్చాపివాసుకిః
పాయాంశ్చత్వామధోవత్స శిష్టాఃకాష్ఠాఃసమీరణః
స్వస్తింవరోతుభగవాన్ పినాకీవృషభధ్వజః
గావోరక్షంతుసర్వత్ర భూమింపాతుసదాశివ॥

இ - ள். உனக்குக்கிழக்குத் திக்கில் விஷ்ணுவிருந்து காக்க. உனக்குத் தென்றிசையிலுருத்திரனிருந்துகாக்க. உனக்கு மேற்றிசையிற் பிரமனிருந்துகாக்க. உனக்குவடதிசையில்ஸ்கந்தரிருந்துகாக்க. உனக்கு மேற்பிரதேசத்திற் சூரியனிருந்துகாக்க. உனக்குக்கீழ்ப்பிரதேசத்தில் வாசுகியிருந்துகாக்க. இன்னும், குழந்தாய்கிருஷ்ணா! ஏனையதிசைகளில் வாயுவிருந்துகாக்க. பிநாகபாணியும், விருஷபத்வஜருமான பகவானவர் க்ஷேமத்தைச் செய்தருள்க. பசுக்களானவை யெங்குமுன்னைக் காத்திடுக. சதாசிவனும் பூமியுமுன்னைக் காத்திடுக. எ – று.

இந்த வாக்கியத்தொடர்பால் பிரம்ஹ விஷ்ணு ருத்ரோத்யாதிகளைக் காட்டிலும் பாரம்ய சிரேஷ்டராயும், சர்வேசுவரராயும் விளங்குந் தேவரீரை யபகர்ஷ வாக்குகள் தொடாவெனவும், இன்னும் நிகிருஷ்ட வசனங்களில் விபூதி விஷயத்தன்மையை ஞாபகப்படுத்தும்படியான ஸ்தாணுவிசாலாட்சாதி சப்தங்களிருக்கு மாற்றால், உசிதமா யந்தந்த விபூதிவிசேஷங்களையேபற்றாநிற்குமெனவும் வியந்து புகழ்ந்ததெனவறிக.

## அவதாரிகை.

ஆயின், பாரதத்திற் பெறப்பட்டகீதையில் கிருஷ்ணனால் தனக்கே பரப்பிரம்ஹபாவத்தினுடைய வடையாளமுள்ள பெருமைகள் அதிகமாகவும், வெகுவிதமாகவும்விஸ்தரிக்கப்பட்டதென்னையென்றாசங்கித்த பூர்வபக்ஷியைநோக்கிப் பரிகரிக்கின்றார்.

## சுலோகம்.

గీతాసుగూఢముదితంభవతఃపరత్వం। నైవస్ఫుటంతదతఏవహిసవ్యసాచీ
గీతార్థమేవగహనంపునరప్యపృచ్ఛ। తద్బోధనార్థముదితాహరిణానుగీతాః॥ ౧౦॥

## மொழிபெயர்ப்பு.

இறைவநினதோங்குபரத்துவமேத்துகீதையெனவியம்புநூலின்
மறைபொருளாய்க்கிளத்தமுறையாலதுவெள்ளிபதன்றேமாண்டவுண்மை
முறையுணரமாட்டாதேபற்குனனப்பொருண்மீண்டும்பன்றுகேட்ட
குறையகலக்கண்ணனநுகீதைவெளிப்படையாகக்கூறினனே. (௧௦)

இ - ள். வாராய்நாதனே ! கீதாசாஸ்திரங்களில் தேவரீருக்குப் பரத்வமானது குப்தமாகச் சொல்லப்பட்டது. அதுவெளிப்படையாகத் தோன்றவில்லை. இக்காரணத்தால் அர்ச்சுனன்தானுணர்வதற்கரிதாயிருந்த கீதார்த்தத்தையேமீண்டுங் கேட்கலாயினன். அவனுக்குத் தெளிவுண்டாம்பொருட்டுக் கிருஷ்ணனாலநுகீதாசாஸ்திரம் சொல்லப்பட்டது. எ - று.

அசுவமேதபர்வத்தில் அநுகீதா சாஸ்திராரம்பத்தில் அர்ச்சுனனாலே சொல்லப்பட்ட வசனம் வருமாறு.

విదితంతేమహాబాహో సంగ్రామేసముపస్థితే
మాహాత్మ్యందేవకీపుత్ర తచ్చతేరూపమైశ్వరం
యత్తుతేభగవతాప్రోక్తం తదాకేశవసౌహృదాత్
తత్సర్వంపురుషవ్యాఘ్ర నష్టంమేవ్యగ్రచేతసః
మమకౌతూహలంత్వస్తి తేష్వర్థేషుపునఃపునః
భవాంశ్చద్వారకాంగంతా నచిరాదేవకేశవ॥

இ - ள். வாராய் மஹா பலசாலியான கிருஷ்ண ! யுத்தமானது நேரிட்டிருக்கும்போது யாதொருத்தனுடைய மாகாத்மியமானதறியப்பட்டதோ, அதுவேயுனக்குஈசுவரரூப்மென்று தெரியலாச்சுது. என்னிடத்தில் சிநேகத்தினாலேயாதொரு ஈசுவரரூபமானதுஉன்னால்சொல்லப்பட்டதோ, வாராய்புருஷோத்தமனே! அஃதெல்லாம் நிலையில்லாத மனசுள்ளவனாகிய வெனக்குமறந்து போய்விட்டது. ஆகையால், அப்படிப்பட்ட வர்த்தங்களைக் கேட்கச் சந்தோஷமானவாசையானது எனக்கதிகரித்திருக்கின்

றது. ஏகேசவா! நீயோ,துவாரகையைக்குறித்து அடிக்கடிச்சீக்கிரமாய்ப் போகின்றவனுகிருய். எ - று.

என்று அர்ச்சுனன்கேட்கும்போது பகவானுயுள்ள கிருஷ்ணனுலே அநுகீதாசாஸ்திரம் உபதேசிக்கப்பட்டது. அச்சாஸ்திரத்தினை யநுசரித்த வாதரூபத்தால் கீதாசாஸ்திரங்களிலே ஸ்ரீ கிருஷ்ணனுல் சிவபரத்துவம் சொல்லப்பட்டதும் விளங்கிற்று. அதுபெரியவாரண்யம் போல்வதாக, அர்ச்சுனனுவினிதுதெள்ளினுணரப்படாமைநோக்கி மறுபடியும்அந்தக்கீதாசாஸ்திரத்தின் விஷயமாகவெழுந்தவினுவினபிப்பிராயத்தைச்சொல்வதும் பூர்வசுலோகத்திற் பெறப்பட்டவுண்மையானே வெளிப்படுதல்காண்க.

## அவதாரிகை.

அர்சுனனுக்குக் கீதாசாஸ்திரங்கேட்குங்காலுண்டான சம்சயத்துக்குக் காரணத்தைவெளிப்படுத்தி, அவன்கேட்கும்வினுவினபிப்பிராயத்தையும் வெளிப்படுத்துகின்ருர்.

## சுலோகம்.

తమేవచాద్యంపురుషంప్రపద్యయి। త్యుదీరితంయన్మదుక్తైటభద్విషా
తమేవసర్వాన్ భ్రమయంతమీశ్వరం। మహాఫలాప్త్యైశరణంవ్రజేతియత్॥౧౧॥

## மொழிபெயர்ப்பு.

உரைசெயுமவ்வாதிபுருடன்றனையேயடைகின்றேனுள்ளவாவென்
றுரவுமிகுகண்ணனுரைத்திடுபொருள்யாதுயிர்யாவுமுழலமாயை
பரமெனவேகொடுசுழற்றும்பாங்கினனுமீசனையேபற்றிநாளுஞ்
சரணடைதிமிக்கபயனெய்தவெனச்சாற்றவருந்தகைமைத்தேதோ. (கக)

இ - ள். அவ்வாதிபுருடனையே யடைகின்றேனென்று கிருஷ்ணனுல் யாதொரு பொருள் சொல்லப் பட்டதோ, சகலமான பிராணிகளையும் மாயையாற் சுழற்றிக் கொண்டிருக்கு மந்தப்பரமேசுவரனையே பெரும் பிரயோசனத்தைக் குறித்து நீ சரணமடைவாயென்று யாதொரு பொருள்சொல்லப்பட்டதோ,எ-று.

மேல்சுலோகத்தைத் தொடுத்துப்பின்னுங் கூறுகின்ருர்.

## சுலோகம்.

ఏతేనకృష్ణస్యసమంముముక్షుణా । స్వారాధనీయః ప్రతిభాసతే॥
సర్వస్యచాహంహృదిసన్నివిష్టఇ। త్యాదేస్తువిష్ణుస్తదుదేతిసంశయః ॥౧౭॥

## மொழிபெயர்ப்பு.

என்னுமிதனுன்முத்திகாமனெனும்பற்குனனேடேயுமன்பு
துன்னுகிருட்டினன்றனக்குவேருகத்தோன்றுபரந்தொகுத்தாம்பின்னு
மன்னுமுயிர்தோறுமிருந்திடுகின்றேனெனென்னுமாற்றமாதி
சொன்னதனுல்விண்டுபரஞ்சமிசயமென்றுளம்பூப்பத்தோன்றுமாலோ. (௧௨)

இ-ள். என்றுகூறப்பட்டதனுல், முமுக்ஷுவாகிய அர்ச்சுனனுடனே கிருஷ்ணனுக்குமுபாஸ்யமானனுன பரம்பொருள் வேருகவுளனென்பதுஏர்ப்பட்டது.யாவருள்ளும்நானிருக்கின்றேனென்றதேத்யாதிகளால் விஷ்ணுபரம்சமிசயமுண்டுபண்ணிற்று.எ-று.

இவ்வுண்மையைக் கீதாநுசாரமாய் விசாரிப்பாம்.

తతఃపదంతత్పరిమార్గితవ్యం। యస్మిన్గతానివర్తంతిభూయః
తమేవచాద్యంపురుషంప్రపద్యే। యతఃప్రవృత్తిఃప్రసృతాపురాణీ॥

என்னும்வசனத்தால், அதன்பின்னர் எதனிடத்திற் சேர்ந்த பேர்கள் மறுபடியுந் திரும்புவதில்லையோ,அதுவேதேடத்தக்கது. யாதொருவஸ்துவினின்றும் பழமையான வாக்கானது வெளிப்பட்டதோ, அந்த ஆதிபுருஷனேயே யடைகின்றேன் என்னும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வசனமானது வெளிப்படுகின்றது. இன்னும், "ఉత్తమఃపురుషస్త్వన్యఃపరమాత్మేత్యుదాహృతః। యోలోకత్రయమావిశ్యబిభర్త్యవ్యయ ఈశ్వరః" என்னும் வசனத்தால் அழிவில்லாத ஈசுவரனென்று யாதொருவன் மூன்று லோகத்தையும் பரித்துக்கொண்டிருக்கின்ருனே, அன்னியனும், உத்தமனுமாகிறவவனே ஆத்மாவென்று சொல்லப் பட்டான் என்று பெறப்பட்டது. இதனுல், புருஷனென்று சொல்லப்பட்டவன் யாவனே, அவனே யாச்சிர யிக்கத்தக்கவனென்றுகொண்டுஎன்னுலே சரணமடையப்பட்டிருக்குமந்த விசனையே நீயுஞ் சரணமடையக் கடவாயென்று அர்ச்சுனனைக் குறித்துக் கண்ணன் சொல்லிய வாய்மைப்பாடு வெளிப்பட்டது.

ఈశ్వర స్సర్వభూతానాం హృద్దేశే௨ర్జున తిష్ఠతి
భ్రామయన్ సర్వభూతాని యంత్రారూఢాని మాయయా
తమేవ శరణంగచ్ఛ సర్వభావేన భారత
తత్ప్రసాదాత్పరాంశాంతిం స్థానం ప్రాప్స్యసి శాశ్వతం॥

இ - ள். வாராய் அர்ச்சுன! மாயையாகிற யந்திரமென்னுஞ் சக்கரத்தை யடைந்திருக்கிற சகல பிராணிகளையுந் தனதுமாயையால் சுழற்றிக் கொண்டிருப்பவராய்ச் சகலமான பிராணிகளுடைய ஹ்ருதயத்தில் யாவரிருக்கின்றனரோ, அவரையே சகலமான தன்மையாலும் சரணமடையக் கடவாய். அந்த வீசுவரனுடையவநுக் கிரகத்தினால் சர்வோத்தமமான சாந்தியையும், சாசுவிதமானஸ்தானத்தையும் அடைவாயாக எ - று.

என்னுமிந்த வசனத்தாலுபதேசிக்கப்பட்டதொருபொருள் சிவமென்று வெளிப்பட்டது. எந்தவிடத்திற்சேர்ந்தால் திரும்புகிறதில்லையோவென்றுகூறி, மீண்டும்சாசுவிதமான ஸ்தானத்தையடைகிறாயென்றுஏகப்பிரயோஜனத்தையே புணர்த்துந் தன்மையாலும், உத்தமனுயுள்ளவனும், அன்னியனுமென்றுசமானாதிகரணங்களாயுள்ளவைகட்கோரிடத்தில் புருஷசப்தம் பிறந்துள்ள தன்மையாலும், ஈசுவரனென்னுஞ் சத்தங்களுக்கர்த்தமொன்றாகவேதோன்றுகையாலுமின்னசுபாவ சீலங்கண்ட பாட்டிற்கேற்பக் கண்ணனால் விளங்காநின்ற பொருட்டலைமை பரசிவனிடந்தானேயெய்திற்றென்னும்படியக்கண்ணன்றானும் பிரபத்திபண்ணிவணங்கக்கடவதாகியபொருளெனவர்ணிக்கப்பட்டது.

இனி, அர்ஜுனன் கிருஷ்ணனைப் பார்த்துவாராய்கிருஷ்ண! உனக்கு நான்சிஷ்யன், என்னையடிமைகொண்டருளென்றுசொன்னபோது, அவனைக்குறித்து மோக்ஷார்த்தமாகச்சரணமடைவாய் என்றுபதேசிக்கப்பட்ட பொருளில் இதரபுருஷ சம்பந்தமில்லாமலிருக்கிற ஈசுவரநாமத்தினால் கொண்டாடப்பட்ட பரமசிவனே நிலைக்கிறபடியா லவரோபரப்பிரஹமென்று சொல்வது கிருஷணனுக்கு இஷ்டாபத்தியென்று வெளிப்பட்டது. அந்தக்கீதையிலே தானே சர்வகாரணத்வம், சர்வாந்தரியாமித்வ முதலிய பிரம்ஹ லட்சணங்கள் கிருஷ்ணன் தன்னிடங் கூறியுள்ளானகையால் சமிசயாஸ்பத மாயிற்றெனின், அதுகூடாது. எங்ஙனமெனின்,

அந்தக்கீதைமுழுதுங் கேட்டபின்னர்ச் சந்தேகமில்லாதவனாகவி ருக்கிறேன், உன்னுடைய வசனப்பிரகாரஞ் செய்கிறேனென்று கண்ணனிடம் அர்ஜுனன் சொன்னமையால் அவனிடம் சம்சய த்தை யூகிப்பது அசங்கதமாயிட்டு. அவனுக்குத் தங்களினத்தா ரோடு சண்டைசெய்வது யோக்யமா, அயோக்யமா வென்னுஞ் சங்கைநிவிர்த்தியொன்றே யாண்டமைந்து நான்யுத்தஞ் செய் கிறேனென்றவன் கடைப் பிடித்தமையேசாலும். அங்யதாகிரகிப் போமெனின், "సర్వధర్మాన్పరిత్యజ్య మామేకంశరణంవ్రజ" என்னும் வச னத்தால் சர்வ தர்மங்களையும் பரித்தியாகம் பண்ணிப் போட்டு என்னையே சரணமடையென்றுபதேசித்த கண்ணனுபதேசத்திற் கட்டுண்டவனாகிச் சந்தேகமில்லாதவனாய்விட்டேனென்ற வசன த்தின்பிரவர்த்தியினாலே யுன்னையே சரணமடையலாமா, மற்றொ ருவரை யடையலாமா வென்னுஞ் சந்தேகமானது நிவிர்த்திக்கப் பட்டது. ஆகையால், சர்வதர்மங்களையும் பரித்யாகம் பண்ணும் படி விதித்த வுன்வாக்கியப்படியே செய்கிறேனென்னும் அர்ஜு னனுடைய விஷ்டாபத்தியை யூகிக்கின் என்னுடைய சம்மதமில் லையென்பதுபெறப்பட்டமையேசேரும். உன்வாக்கியப்படியேசெ ய்கிறேனென்றதற்கு மாறாய் அவனுக்கு யாவஜ்ஜீவகாலமும் சிவ பூஜாநிஷ்டத்தன்மையே சாஸ்திரசித்தமாதலுங் காண்கையால். இனி அநுகீதாரம்பத்திலே வந்திருக்கிற அர்ஜுனனுடைய பிரசி னையினுபக்கிரமத்தாலும் மேலுண்மைவெளிப்படும்.

విదితం తేమహాబాహో సంగ్రామేసముపస్థితే
మాహాత్మ్యం దేవకీపుత్ర తచ్చతేరూపమైశ్వరం॥

இ-ள். வாருமையா மஹாபாஹுவான கிருஷ்ணரோ! யுத்த மானது நேரிட்டகாலத்தில் தேவகீபுத்திரராகிய வும்முடைய மா ஹாத்மியமானது தெரிந்துகொள்ளப்பட்டதெதுவோ, அது ஈசு வரனுடைய ரூபமென்று அறிந்தேன். எ-று.

இதனால், அந்தயுத்தகாலத்தில் நானிப்படியறியாமற் போ னேனென்றும், இப்போது அவ்வுண்மையை யறிய விரும்புகிறே னென்றும்,முன்னுபதேசித்ததுமறதியாய்விட்டதென்றும்பாவம். மேல் அர்ஜுனனுக்கு முன்னுபதேசிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்தி

னுடைய நிச்சயமானது உண்டாகவில்லையென்று வெளிப்பட்டதன்மேல் ஸ்ரீ கிருஷ்ணர் பதிலுரைத்தவாக்கியத்தையும்பரியாலோசிப்பாம்.

ఇత్థమస్యయదిసంశయోభవేదన్యథాగ్రహణమేవవాపునః
నాగ్రహీన్మదుపదిష్టమేషఇత్యాగ్రహంహరిరవోచదుత్తరే॥

(இ-ள்.) இந்த அர்ஜுனனுக்கு இந்தப்பிரகாரம் சமிசயமாவது, வேறுவிதமாய்க் கிரகிக்குங்குணமாவது உண்டாயிருக்குமானல் மறுபடியும் என்னுலுபதேசிக்கப்பட்ட அர்த்தத்தையிவன்கிரகிக்கப்போகிற தில்லையென்று ஆக்கிரஹமாக ஸ்ரீ கிருஷ்ணரானவர் உத்தராரம்பத்திற் சொன்னர். எ-று.

శ్రావితస్త్వంమయాగుహ్యం జ్ఞాపితశ్చసనాతనం
ధర్మస్వరూపిణంపార్థ సర్వలోకాంశ్చశాశ్వతాన్
అబుద్ధ్యాయంనగృహ్ణీథాః శాస్త్రంమేసుమహత్ప్రియం
నూనమశ్రద్దధానో஽సి దుర్మేధాశ్చాసిపాండవ
సహిధర్మస్సుపర్యాప్తో బ్రహ్మణఃపదవేదనే॥

(இ-ள்.) இந்தப்பிரகாரம் அந்த அநுகீதாசாஸ்திரத்தில்பிரதியுத்தராரம்பத்தில்கேட்ட பழமையாயும், தர்மசொரூபியாயுமிருக்கிற பிரம்ஹத்தையும், சாசுவிதங்களாயிருக்கிற லோகங்களையுங்குறித்து என்னலே யோக்கியமாக ஞாபகப் படுத்தப்பட்டாய். எனக்கு வெகுபிரியமாயிருக்கிற சாஸ்திரங்களைத் துர்ப்புத்தியாலும், அஞ்ஞானத்தாலுங் கிரகியாமற்போனுய். நிச்சயமாகச்சிரத்தை யில்லாதவனுகவும், துர்ப்புத்தியுள்ளவனுகவு மாய்விட்டாய். வாராய் அர்ஜுன! என்னல் சொல்லப்பட்ட அந்தத்தர்மமானது பிரம்ஹத்தை யறிவதற்குப் போதுமானதாயிருக்கின்றது. எ-று.

என்னும்ஸ்ரீகிருஷ்ணர்வாக்கியத்தில்அறியப்பட்டதென்றும், நஷ்டமாய்ப்போய்விட்டதென்றும், அஞ்ஞானத்தா லிவன்கிரகிக்கவில்லையென்றும் வெளிப்பட்டிருக்கின்றது. கீதையா லுபதேசிக்கப்பட்ட ரஹஸ்யார்த்தத்தைக்கிரகிப்பதற்கு சக்தியில்லாதவனைதன்னிடத்தில் உபதேசத்துக்கு யோக்யனயிருக்கிற தன்மையைக்காட்டும்படியானபுத்திவிகாசமுண்டாகவேண்டுமென்றுசொல்லி

மறுபடியும் வினவிய ஸாரமான அர்த்தமானது நஷ்டமாச்சுதென்று பிரஸ்தாபித்தபடியும், அவனுக்குச் சமீபமிருக்குமேயானல் மோஹமாவதிருந்தாலும் பரப்பிரம்ஹம் உபதேசிக்கப்படும் என்றுரைத்தபடியும் விளங்கலா லவ்வர்ஜுனனுடைய புத்தியானது இரண்டுவிதத்திலேயும் என்னுலுபதேசிக்கப்பட்ட அர்த்தக்கிரஹணத்துக்கு யோக்யப்படவில்லையென்று ஸ்ரீ கிருஷ்ணரபிப்பிராயம் வெளிப்படுகின்றது. யுத்தத்தினுடைய ஆரம்பத்தில் நிலையில்லாத் தன்மையைச்செய்துகொண்டிருக்கிற புத்தியினுடைய ஏகாக்கிரபாவமே காரணமாகையால் அஃதில்லாதபோது சகலபாரத்தையும் வகிக்கும்படியான கிருஷ்ணனிருப்பதால் எனக்கு யாதொருநிமித்தமுமில்லை யென்று அர்ஜுனன் சொன்னனென்றும், புத்திசாபலியத்துக்கு விரோதியாயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணர் விஷயமான விசுவாச ரூபமாயிருக்கிற சிரத்தையினுடைய பாவமானது தானே சகலபாரத்தையும் வகிக்கும்படியானதாயிருக்கிறதென்றும்,துரகங்காரத்தினுற் செய்யப்பட்ட துர்ப்புத்தியான மூலமே தெரிந்துகொள்ளாமைக்குக் காரணமென்றும் வெளியாயினமையே யன்றி மறுபடியும் உபதேசிக்கும்படியான அர்த்தத்திலே அவ்வர்ஜுனனுக்குக் கிரகியாமையானது உண்டாகவேண்டாம் என்று கோபத்தை யபிநயப்படுத்தி அவன் சுகமாகத்தெரிந்துகொள்ளுநிமித்தம் சாதுரியத்தினுலேவிளங்குஞ்சொற்களால் கீதையா லுபதேசிக்கப்பட்ட சகலார்த்தங்களையும் பரப்பிரம்ஹ பாவமாகவே கொள்ளென்றும், என்னுடைய சம்பந்தமாகக்கொள்ளுற்கவென்றும், அவையென்பரமாகாவென்றும் ஸ்ரீகிருஷ்ணர் சொல்லிய வுண்மையும் வெளிப்பட்டது.

## அவதாரிகை.

மற்றுரைக்கப்பட்டது யாதெனின், யாதொரு பரமசிவன் என்னல் சரணமாக அடையப் பட்டாரோ, என்னுலுபாசிக்கத் தகுந்தவராக விருக்கின்ருரோ, அவருடைய மகிமையேயென்று ஸ்ரீகிருஷ்ணரால் எஞ்சனுவிர்த்தியால் காண்பிக்கப்பட்ட தென்பதைப்பிரவசனித்தபடியாம்.

(சுலோகம்.)

• ఉక్తా చ సంశయచ్ఛేదయోగ్యా యోగాని యోగినాం
చ [illegible]

శక్యంతదద్యనమయాభణితంతదోక్తం
[illegible]ధిరూఢమనసానబహిర్దృశేతి. ॥౧౩॥

(மொழிபெயர்ப்பு.)

**சா**துரியமாமிந்தமொழிகிளையாற்பற்குனனர்சமிசுடங்க
ளேதுமிலாவகையருளினனன்றேகண்ணனவையிசைக்கின்யோ[illegible]
சாதகமேலிடொன்றுமனமுடையென்னலன்றுசாற்றுமுண்மைப்
போதசிவரூபநவின்றிடவின்றுபோதாதுபுறத்தாறின்றே. (கங)

( இ - ள் . ) கிருஷ்ணரானவர் இந்தச்சாதுரிய மாயிருக்கிற சொல்லினுடைய வரிசையால் அர்ஜுனனுடைய சம்சயவிபரீத ஞானங்களுடைய நிவர்த்தியைத்தேடினர். எங்ஙனமெனின், யோகத்தையடைந்திருக்கிற மனசையுடைய என்னலே அப்படிச்சொல்லப்பட்ட சிவசொரூபமானது இப்போது சொல்வது சாத்தியமன்று. வெளிப்பார்வையினலே சொல்லத்தக்கதல்ல வென்றபடியாம். எ - று.

பிரம்ஹசொரூபத்தை யறியும்படியான வகையில் அந்தத் தருமமானது போதுமானது என்று சொன்னதற்கு மேல் கிருஷ்ணர் வசனம்வருமாறு.

నశక్యతన్మయాభూయస్తథావక్తుంయథేష్టతః
పరంవాధర్మమధికంయోగయుక్తేనతన్మమే॥

(இ-ள்.) ஓய்அர்ஜுனு! அந்தப்பிரம்ஹசொரூபமானது பூர்னமாகக்குறைவின்றி யென்னலேசொல்லப்படுவது சாத்தியமன்று. யோகமாகிய ஞானத்தோடே கூடியவென்னலே அந்தச்சொரூபமானது அதிகதர்மமாகச் சொல்லப்பட்டது. எ-று.

இந்தவிடத்தில யோகாருடமாயிருக்கிறமனசாலேயே சொல்லப்பட்டது என்றது கொண்டு பாஹிர்மனசால் சொல்லப்படவில்லையென்றும், அடங்கியமனசில்லாமல் வெளிப்பட்டமனசால் சொல்வது அசாத்யமென்றும் பெறப்பட்டவாறறிக.

இங்ஙனம்பெறப்படுதலுக்கு வேறுகக்கற்பிக்கப்பட்டசொல்லுகளின்வரிசையால் உபதேசிக்கப்பட்ட சகலமானமகிமையும் எனதுசம்பந்த முடையனவன்றும். எல்லாமெனக்கன்னியனகிய

வொருவனுடையசம்பந்தமுடையனவாமென்று ஸ்ரீகிருஷ்ணரால் பரிஷ்கரித் துரைக்கப்பட்டது. தானேநித்தியனென்றும், சர்வஞ்ஞனென்றும், பரப்பிரம்ஹமென்றும் ஸ்ரீ கிருஷ்ணர்சொல்லியதை யோகத்தின்றன்மையையபேக்ஷியாமல்சொல்லக்கூடாது. யோகத்தோடேகூடிய சொல்லானது இருப்பதனால் யோகத்தினாலே சிவோகமென்னுந் தன்மையையடைந்து அந்தச்சிவனுடைய சகலமானமகிமையுந் தனதாகவே சொல்லப்பட்டதென்று எஞ்சனுவிர்த்தியினாலே காண்பிக்கப்பட்டது. இந்தப்பிரகாரம்யோகத்தையன்றிச்சொல்லுகிறதற்குச்சாத்யமல்லவென்றுசொன்னபிற்பாடு அர்ஜுனனுக்குந் தனக்குமிருக்கிற சிநேகத்தினுடைய ஸ்மரணையினாலே மறுபடியு மெப்படி யாகிலும் உபதேசத்தினாலே இவனுடைய சம்சய விபரீதங்களை யறவேயொழிக்கத்தக்கதென்றாலோசித்து ஸித்தபுருஷரொருவருடன் காசிபமுனிவர்ஸம்வாதம்பண்ணினதாயுள்ள அர்த்தத்தை யுன்பொருட்டு நான்சொல்லுகிறேன் எனவும், காசிபஸித்தபுருஷ ஸம்வாதத்தி னர்த்தத்தை நான்முன்னே கேட்டிருக்கின்றேனாகையால் அதனையேயிப்போ துனக்குச் சொல்வது யுக்தமெனவு மிதவுரைபேசிப் பிரதிக்ஞா ரூபத்தால் வைராக்யத்தைச் சேர்ந்தபொருளையும், பூர்வதேகபரித்யாகத்தையும், தேகாந்தரப் பிரவேசப்பிரகாரத்தையும், இஹலோகபரலோகங்களில் ஸம்ஸாரிக்கு வரும்படியான துக்கபாஹுள்யத்தையும், வைராக்யத்துக்காதாரமாயுள்ளவர்த்தங்களின் பாவன விசேஷத்தையும், விரக்தனாயுள்ளவனடையத்தக்க மோக்ஷோபாயத்தையுமுபதேசித்து, வாராய்அர்ஜுனா! இந்த அர்த்தமானதுஏகாக்கிரமாகியமனசோடு உன்னாற் கேட்கப்பட்டதா? இல்லையா? என்றுபிரசினித்து, முன்றடவையி விதேயர்த்தத்தையேயன்றோ நீயிரதத்தின்மேலிருந்து கேட்டாயென்று பகவானாகிய ஸ்ரீகிருஷ்ணர்தமது பிரசங்கத்தையுபசம்ஹாரம்பண்ணினார்.

## அவதாரிகை.

மேலர்த்தத்தையே சுருக்கமாய்ச் சொல்லுகிறார்.

## சுலோகம்.

అధునాతదుపాస్యసంశయాద్యావగచ్ఛత్యతిసౌహృదంస్మరేః
ఇతరోక్తమిహశ్రుతయయేత్యుపదేశ్యేకియదాహతత్రసః. ||౧౪||

(மொழிபெயர்ப்பு.)

ஐயமெலாமொழியறிந்திடுதியருளென்மொழியையன்பவீது
மெய்யுடையார்சொற்றதிறத்ததுயானுமேற்றதுநின்மேலன்புற்ற
செய்யபரிவாலின்றுசெப்பவருள்கூர்ந்தனனிச்செய்திகேளென்
றுய்யுமுறையாற்கண்ணனருச்சுனகேட்டுவப்பநனியுரைத்தானன்றே. (சச)

(இ-ள்.) இப்போது அந்தச்சந்தேக முதலியவற்றைத் தள்ளி யான்சொல்வதை அறிவாயென்று சிநேகத்தை ஸ்மரித்தவராகி இது இதரமானவர்களாலே சொல்லப்பட்டது, அது என்னாலே கேட்கப்பட்டது என்று அதையுபதேசத்துக்கு யோக்யனான அர்ஜுனனிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர்பிரசாதம் பண்ணினார். எ-று.

இதனால், அப்போது எவ்வளவு அர்த்தஞ்சொன்னா ரென்பதும், ஏகதேசமாகியவழியாய்க்கீதாசாஸ்திரத்தினுடைய அர்த்தமடங்கலும் ஸ்ரீ கிருஷ்ணரானவர் அன்னியரிடத்தில்தாம்சிரவணஞ் செய்தபடிக்கே அர்ஜுனனுக் குபதேசித்தா ரென்பதும் பெறப்படலால் அந்தச்சாஸ்திரப் பிரதிபாத்யமான பாவமானது காண்பிக்கப்பட்டது.

---

அவதாரிகை.

கேட்குந்தன்மையும், சொல்லுந் தன்மையும் மேல்பிரவசனஞ்செய்கிறார்.

சுலோகம்.

తస్యస్థిరీకరణమాత్మనిపూర్వవృత్తంస్వస్యైవబుద్ధిమనసీద్విజదంపతీచ
కృత్వానుయోజనతదుత్తరయోరనుక్త్వావిఖ్యాప్యతద్వివరణంచచకారశౌరిః. ॥౧౫॥

(மொழிபெயர்ப்பு)

அந்தவருச்சுனன்முன்னாலடைந்தமனவுறுதிநிலைபறிந்துதன்பா
லுந்துமுயர்புத்திமனமென்னுமிவைகளைநீடுமுண்மைசான்ற
பந்தமுறுபார்ப்பனதம்பதியாக்கியேவல்விடைபகராதின்ப
முந்துசிவரூபத்தையன்புடனேகண்ணனனிமொழிந்தான்மன்னோ. (சரு)

(இ-ள்.) அந்த அர்ஜுனனுடைய மனசினாலே முன்னாலே செய்யப்பட்டதாயுள்ள வுறுதிப்பாட்டைக் குறித்துத் தன்னுடைய புத்திமனசுகளைப் பிராம்ஹண தம்பதிகளாகச்செய்து ஏவலுத்

தரங்களைச்சொல்லாமல் பிரசித்தப்படுத்தி, அந்தப்பிரம்ஹசொரூபத்தின்விவரத்தை ஸ்ரீ கிருஷ்ணர்செய்தனர். எ-று.

முன்சொன்ன இதிகாச கற்பனையினாலே கிடைத்திருக்கும்படியான அர்த்தங்களுடைய கூட்டத்தை நன்றாக மனசினாலேயாலோசித்து இது இந்தப்பிரகாரமேதானென்று அவ்வர்ஜுனனுடையபுத்தியிலேயும், முன்தன்னாலே செய்யப்பட்டவுறுதிப்பாட்டையொரார்றொரு கற்பனையினுடைய ரீதியினாலே காண்பித்தார். அந்தக்கற்பனுபங்கியானது தனதுபுத்தி மனசுகளைப் பிராம்ஹண தம்பதிகளாகச்செய்து கூறியதேயாம்.

బ్రాహ్మణీబ్రాహ్మణంకంచిత్ జ్ఞానవిజ్ఞానపారగం
దృష్ట్వావివిక్తఆసీనం భార్యాభర్తారమబ్రవీత్.॥

(இ-ள்.) ஒருபிராம்ஹணஸ்திரீயானவள் ஞானவிஞ்ஞானங்களுடைய கரையைக்கண்டவராயிருக்கிற வோர்பிராம்ஹணரைப் பார்த்துச் சித்தாநுசாரமாயிருந்துகொண்டிருக்கும்போது பாரியாளாகிய வந்தப்பிராம்ஹண ஸ்திரீயானவள் பர்த்தாவைக்குறித்துச் சொல்லுகின்றாள். எ-று.

இத்யாதிகளால் பிராம்ஹண ஸ்திரீயினுடைய பிரசினத்தையவதரிப்பித்து அதற்குப் பிராம்ஹணனாலே சொல்லப்பட்டிருக்கிறவுத்தரத்தினாலே பழமையாயிருக்கிற சகலமானவிதிகாசார்த்தத்தையுந்தெரிவித்த படியாம்.

యదిదంబ్రాహ్మణోలింగంక్షేత్రజ్ఞ ఇతిసంజ్ఞితం
గృహీతుంయేనతచ్ఛక్యంలక్షణంతస్యతత్క్వను॥

(இ-ள்.) க்ஷேத்திரக்ஞனென்றுசொல்லப்படும் யாதொருபிரம்ஹத்துக்கு லட்சணங்களுண்டோ,அந்தலட்சணத்தைக்கிரகிப்பதற்குச் சாத்யமானவுபாயம் யாதோ, அதைச்சொல்லு மென்று பிராம்ஹணஸ்திரீயானவள் பிரசினைபண்ணினள். எ-று.

என்ற சுலோகத்தினாலே பந்தமுக்திகளின் பிரயோசனத்தை யடைந்தவராயும், சரீரத்தைக் காட்டிலும் வேறாயிருக்கிற க்ஷேத்திரக்ஞனுடைய கிரகண வுபாயத்தைச்சொல்லும்படியானவராயும் விளங்கும் பிராம்ஹணரைப்பார்த்துப் பிராம்ஹணஸ்திரீ

யானவள் மறுபடியும் விஞவையுண்டுபெண்ணுகையில் பிராம்ஹண ஞலேயதற்குக்கரஞ் சொல்லப்பட்டவுபாயமும் அநந்தரம்சொல் லப்பட்டது.

(அர்ஜுனன்சொல்லுகிற வசனம்.)

క్వనుసా బ్రాహ్మణీశక్తిః క్వచాసౌ బ్రాహ్మణప్రభుః
యాభ్యాం సిద్ధిరియం ప్రాప్తా తావుభౌ వద మేచ్యుత.॥

(இ-ள்.) வாராய் கிருஷ்ணு! அந்தப்பிராம்ஹணஸ்திரீ யார்? அந்தப்பிராம்ஹணன்யாவன்? எந்தப்பிராம்ஹண தம்பதிகளாலே யிந்தப்பிரம்ஹஸித்தி யடையப்பட்டதோ, அவர்களை யெனக்குச் சொல்லும். எ-று.

என்று அர்ஜுனனுலே கேட்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணருடைய வுத்தரவானது சமீபிக்கப்பட்டது.

మనో మే బ్రాహ్మణం విద్ధి బుద్ధిం మే విద్ధి బ్రాహ్మణీం
క్షేత్రజ్ఞ ఇతి యశ్చోక్తస్సోహమేవ ధనంజయ.॥

(இ-ள்.) என்னுடைய மனசைப் பிராம்ஹணனுகத் தெரிந்து கொள்ளு. என்னுடைய புத்தியைப் பிராம்ஹணஸ்திரீயாகத்தெரி ந்துகொள்ளு. க்ஷேத்திரக்ஞனென்று யாது சொல்லப்பட்டதோ அது நான் என்று அறியக்கடவாய். எ-று.

இந்தப்பிரகாரம் பகவானுயிருக்கிற கிருஷ்ணனுலே தனக் குக் கீதையிலே யுபதேசிக்கப்பட்ட பிரம்ஹவிஷயமான சிரவண மநநங்களை யுடையதான வுபாக்யானங்க ளிரண்டும் கல்பனையி னுலே விவரிக்கப்பட்டன. அனந்தரம் அந்தச்சாஸ்திரமுகத்தால் தனக்குத் தன்னுலே கேட்கப்பட்ட சித்தாந்த பரிவசானத்தால் பரப்பிரம்ஹத்தில் மனசை யடக்குவதும், அதற்குபயுக்தமா யுள் ள பக்தியை நிலைப்படுத்துகிற நிமித்தம் மனசினுலே பரப்பிரம்ஹ பாவங்களுக்கு லிங்கபூதமாயிருக்கிற சமஸ்தமாயுள்ள வந்தப்பிர ம்ஹத்தின் மகிமையைத்தெரிந்து கொள்வதும், அந்தப்பிரம்ஹத் துக்கு வேதத்தினுலே ஸித்தமாயிருக்கிற பிரம்ஹலக்ஷண சொரு பமான ஜகத்காரணத்தன்மையையுணர்வதும், தனக்கும் அந்தப் பிரம்ஹத்தினுலே சிருஷ்டிப்பாடு அறிவதும், கர்மாநுஷ்டானத் தோடே கூடிய வந்த வுபாசனையினுலே தனக்கும் ஹ்ருதயமாகிய

முடியவிழ்க்கப்படுதலுமாகிய சமஸ்ததர்மங்களையும் அர்ஜுனனுக்குக் குருசிஷ்யஸம்வாதரூபமாக ஸ்ரீகிருஷ்ணராலே சொல்லப்பட்டது.

## அவதாரிகை.

அந்தக்குருசிஷ்யர்கள் நானும் என்னுடைய மனசுமென்று கூறியதின்பின்னர் யாதொரு விவரமானது செய்யப்பட்டதோ அதனுடைய வர்த்தத்தைச் சுருக்கிச் சொல்லுகின்றார்.

(சுலோகம்.)

అగ్రేతత్త్వంపరంకింత్వమహమపికుతస్సర్వభూతానిచేతి
ప్రశ్నేశిష్యస్యతస్మైగురుకృతమఖిలంబ్రహ్మతత్త్వోపదేశం।
మోక్షంశిష్యస్యచోక్త్వా పునరపివిజయేనానుయుక్తోగురుఃక
శ్శిష్యోవేతిస్వమేవేశ్వరగురుమవదత్స్వస్యచిత్తంస్వశిష్యం. ||௧௬||

## மொழிபெயர்ப்பு.

ஐயநீயுரைப்பதன்முன்னருளுதிமெய்ப்பரம்யாதுயானார்நீயார்
பையவேயெதினின்றுந்தோன்றினபூதங்களெலாம்பகராயென்ன
மையறவிர்மாணவகனுய்யவாரியன்கூறுமாட்சித்தாகு
மெய்யவிரும்பிரமோபதேசத்தாற்பெறுமோக்கமேன்மைகூறி.

### இதுவுமது.

அருளலுமீண்டக்குருவாரன்புமிகுமாணவகனார்மற்றென்று
பொருள்வினவும்பற்குனற்குப்புகலுவான்கண்ணனருள்பொங்குமீசன்
றெருள்பதிந்தவென்னிடமேகுருத்தன்மைசேருமுளந்தெளிதியென்றன்
மருள்பொதிந்தசித்தமெனுமாணவகனுமென்றேமதிப்பாயென்றான்.

(இ-ள்.) நீர்சொல்லுவதற்குமுன் பரதத்வமெது? நானார்? நீயார்? எதிலேநின்றுஞ்சர்வபூதங்களுமுண்டாயின? என்னுஞ்சிஷ்யனுடையவினவிலே அவனுய்யும்பொருட்டுக் குருவினாலே செய்யப்பட்டபிரம்ஹதத்வோபதேசத்தையுடைய மோக்ஷத்தைச் சிஷ்யனுக்குச்சொல்லும், மறுபடியும்அந்த அர்ஜுனனாலே குருவார்? சிஷ்யனார்? என்றுகேட்கப்பட்டவராய்ப் பரமேசுவரனைக் குருவாகப்படைத்த தன்னையேகுருவாகவும், தன்னுடைய சித்தத்தையே சிஷ்யனாகவும் ஸ்ரீ கிருஷ்ணரானவர் கூறினர். எ-று. (௧௬)

மேலிரண்டுபாடலுங் குளகம்.

இந்தப்பிரகாரம் கிருஷ்ணராற் கற்பிக்கப்பட்ட வுபாக்யானத் துவயத்தினுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்டவனாகிய அர்ச்சுனன் சொல்லுகிறான்.

బ్రహ్మయత్పరమంవేద్యం తన్మేవ్యాఖ్యాతుమర్హసి
భవతోహిప్రసాదేన సుసూక్ష్మేరమతేమతిః॥

(இ-ள்.) அறியத்தக்கதான பரப்பிரம்ஹமெதுவோ அதை யடியேனுச்கு வியாக்கியானமாகச் சொல்லுகிறதற்குத் தேவரீரே யோக்யரா யிருக்கின்றீர். தேவருடைய அநுக்கிரகத்தால் நுட்ப மாயிருக்கிற பாவத்திலென்னுடையபுத்தியானது ரமித்துக்கொ ண்டிருக்கின்றது. எ-று.

என்று வெளிப்பட்ட விந்தப்பிரசினையின்பிற்பாடு பரப் பிரம்ஹ சொரூபத்தை யுபதேசிக்கும்படி விரும்பப்பட்டவராகிய கிருஷ்ணராலே சிஷ்யாசாரியஸம்வாதரூபமாகக் கற்பிக்கப்பட்ட வோரிதிகாசமானது பிரவர்த்திக்கப்பட்டது.

కంచిద్బ్రాహ్మణమాసీన మాచార్యంసంసితవ్రతం
శిష్యఃపప్రచ్ఛమేధావి కింస్విత్పరతరంభవేత్॥

(இ-ள்.) புத்திசாதியாயுள்ள வோர்மாணுக்கன் குருமூர்த்த மாகவெழுந்தருளி யிருப்பவராயும், சகலவிதாநுஷ்டாநங்களுஞ் செய்தவராயும் விளங்குமாசாரியராகியவோரந்தணைப்பார்த்து எது பரதத்துவப் பொருளாயுள்ளது என்றுகேட்டான். எ-று.

కుతశ్చాహంకుతశ్చత్వం తత్పరంబ్రూహియత్పరం
కుతోజాతానిభూతాని స్థావరాణిచరాణిచ
కేనజీవంతిభూతాని తేషాంస్యాత్కుత్రవాలయః॥

(இ-ள்.) நான் என்பதற்குக்காரணமெது? நீயென்பதற்குக்கா ரணமெது? இரண்டிக்கு நடுநிலையாயுள்ள பொருளெது? அதைச் சொல்லியருளும். எதினின்றுஞ்சராசரங்களாயுள்ளபூதங்களுண் டாயின? அப்பூதங்களெதனல் பிழைத்துக் கொண்டிருக்கின்றன? அந்தப்பூதங்களுக்கு ஒடுக்கமெதனிடத்தில்? எ-று.

என்னும் பிரசினைகள் சிஷ்யனால் பிரசங்கம்பண்ணியபோது அவைகட்குப் பிரத்தியுத்தரத்தைச்சொல்ல வுத்தேசித்தவராகிய ஆசாரியர்வசனம் வருமாறு.

బ్రహ్మప్రోక్తమిదంధర్మం ఋషిప్రవరసేవితం
వేదవిద్యాసమావాప్తం తత్వభూతార్థభావనం
భూతభవ్యభవిష్యాది ధర్మకామార్థనిశ్చయం
సిద్ధసంఘపరిజ్ఞాతం పురాకల్పేసనాతనం
ప్రవక్ష్యామిమహాప్రాజ్ఞ పదముత్తమమద్యతే
బుద్ధాయదిహసంసిద్ధా భవిష్యంతిమనీషిణః॥

(இ-ள்.) நீகேட்டபொருள் பிரம்ஹதேவரால் சொல்லப்பட்டது. உத்தமர்களான விருடிகளால் ஸேவிக்கப்பட்டது. வேதவித்தையினு லடையப்பட்டது. தத்வசொரூபங்களுடைய அர்த்தபாவனையுள்ளது. உண்டானதும், உண்டாயிருக்கிறதும், உண்டாகப்போவதுமாகிய சகலதர்மகர்மங்களுடைய அர்த்தநிச்சயமுள்ளதா யிருக்கின்றது. ஸித்தபுருஷ ஸமூஹத்தா லறியப்பட்டதாயுள்ளது. கற்பங்கடோறும் பழமையாயுள்ளது. வாராய் சிஷ்யனே! உத்தமமாயிருக்கிற அந்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன். எந்தப்புத்திசாலிகளானபேர்க ளிந்தச்சாஸ்திரத்தில் சொல்லுகிற ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வார்களோ அவர்கள் ஸித்தராய் விடுவார்கள். எ-று.

என்னும் ஸத்தியார்த்தத்தைப் பிரதிஜ்ஞையால் சொல்லி அவ்விஷயத்தில் கேட்கிறவனுக்கு ஆதரவு சித்திக்கும்பொருட்டு முனிவர் கூட்டத்துக்கும், பிரம்ஹதேவருக்கும் நடந்த ஸம்வாதரூபமாயுள்ள பெரிய வுபாக்கியான மொன்றை யுபதேசித்து, அதன் முகாந்திரமாகச் சிஷ்யனுடைய பிரசினவிஷயமான சகலார்த்தங்களுமுணர்த்தப்பட்டன. அதன் மத்தியிலே பிரம்ஹதேவர் தனக்கும் விஷ்ணுவுக்கும் மகிமையை வர்ணிக்கும் விஷயமாகத் தேவரிஷிகளைக் குறித்துச் சொல்லிய வசனம் வருமாறு.

సర్వేషామపిభూతానా మహంబ్రహ్మనమోమహాన్
భూతంపరతరంమత్తో విష్ణోర్వాపితువిద్యతే
రాజాధిరాజస్సర్వేషాం విష్ణుబ్రహ్మమయోమహాన్
ఈశ్వరంతంవిజానీమ స్సవిభుస్సప్రజాపతిః
దేవదానవభూతానాం పిశాచోరగరక్షసాం
నరకిన్నెరయక్షాణాం సర్వేషామీశ్వరఃప్రభుః
ఆదిర్విశ్వస్యజగతో విష్ణుబ్రహ్మమయోమహాన్॥

(இ - ள்.) நான் சகலமான பூதங்களுக்கும் பிரம்ஹமய மான பெரியவன். என்னிடத்திலே நின்றும் பரதத்வமான துண் டாயிற்று. விஷ்ணுவிடத்திலே நின்றும் பரதத்வ முதயமாயிருக் கின்றது. அந்த விஷ்ணுவானவர் பிரம்ஹமயமாயுள்ள பெரிய வர். சகலருக்கும்ராஜாதிராஜராகவிருப்பவர். பிரபுவாயிருப்பவர். பிரஜாபதியாயிருப்பவர். தேவர்கள், அசுரர்கள், பூதங்கள், பிசா சங்கள், சர்ப்பங்கள், ராக்ஷஸாள், மனுஷ்யாள், கின்னராள் முத லாகயாவருக்கும் ஈசராயுள்ளவர். இன்னு மிவ்வுலகத்துக்காதியா யிருக்கின்றவர். பிரம்ஹமயமான வந்த விஷ்ணுவானவர் மஹானு யுள்ளவர்-எ-று.

என்ற வர்த்தத்தை யினிது வெளியிடலால் நானெவ்வி டம் என்று கேட்டபிரசினேக்கு ஸமாதானமுண்டாயிற்று. மேல் பிரம்ஹமயனென்னும் பிரயோகத்தால் மயட்பிரத்தியேயம் வந்த தால் பிரம்ஹத்தின் காரியத்வம் விஷ்ணுவுக்குச் சொல்லப் பட்டது. அந்தப்பகவானுயிருக்கிற விஷ்ணுவே கிருஷ்ணனுகை யாலவருக்கு மயட் சொரூபத்வம் வேறேசொல்லாமை யுக்தமாச் சுது. இவனைக்காட்டிலும் அதிகமான தொன்றுமில்லே யென்பா ராயின்,மயட்என்பது வியர்த்தப் பிரசங்கமாய்விடும். சதுர்முகரா ற்சொல்லப்பட்டிருக்கிறபிரம்ஹமயசப்தத்துக்குப் பிரம்ஹகாரிய த்வார்த்தமிருக்கையாலெங்குமொரோவிதமாய்ப்பாடவிரோதமில் லாமையைக்கண்டு மேலர்த்தத்தையே கிரகித்திடுசு. இந்தப்பிரகா ரம் பிரம்ஹதேவரிஷி ஸம்வாதரூபமான வுபாக்கியானத்தைப் பிர சங்கஞ் செய்தபிற்பாடு சிஷ்யனேக்குறித்துக் குருவினுடைய வச னம் பிரவர்த்திக்கப்பட்டது வருமாறு.

త్వమప్యేవంమహాభాగ యథోక్తంబ్రహ్మణోవచః
సమ్యగాచరశుద్ధాత్మ న్తతస్సిద్ధిమవాప్స్యసి
ఇత్యుక్తస్సతదాశిష్యో గురుణాధర్మముత్తమం
చకారసర్వంకౌంతేయ తతోమోక్షమవాప్తవాన్
కృతకృత్యస్తదాపార్థ శిష్యఃకురుకులోద్వహ
తత్పదంసమనుప్రాప్తో యత్రగత్వానశోచతి॥

(இ-ள்.) பாக்கியசாலியா யிருக்கிறசிஷ்யனே! பிரம்ஹதேவ ராலெப்படிச் சொல்லப்பட்டதோ வந்தப்படியே நீயுமாசரித்து

வரக்கடவாய். வாராய் சுத்தாத்மாவே! அதனாலே நீ ஸித்தியை யடைகிறாயென்று சொல்லப்பட்டவனாகிய வந்தச்சிஷ்யனானவன் குருவினாலே யுத்தமமான ஸகலதர்மத்தையு மறிந்தான். வாராய் அர்ஜுனா! அதற்குப்பிற்பாடு க்ஷேமத்தை யடைந்தான். அந்தச் சிஷ்யனானவன் செய்கையற்றவனாகி எந்தவிடத்திற் சேர்ந்தால் துக்கமில்லையோ அந்தச்சொரூபத்தை யடைந்தான். எ-று.

என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனைப்பார்த்துச்சொல்லியதின் பின்னர் அர்ஜுனன் பிரசினைபண்ணுகிறான்.

కోన్వసౌబ్రాహ్మణఃకృష్ణకశ్చశిష్యోజనార్ధన
శ్రోతవ్యంయన్మయైతద్వైతన్మమాచక్ష్వమేప్రభో॥

(இ-ள்.) வாராய்கிருஷ்ணா! இந்தப்பிராம்ஹணன்யார்? சிஷ்யன்யார்? என்னாலே கேட்டுக்கொள்ளவேண்டிய தெதுவோ அதை யெனக்குச்சொல்லும் என்பிரபுவே. எ-று.

என்று அர்ஜுனன்கேட்டதற்கு ஸ்ரீகிருஷ்ணர் கூறுகின்றார்.

అహంగురుర్మహాబాహో మనశ్శిష్యంచవిద్ధిమే
త్వత్ప్రీత్యాగుహ్యమేతచ్చ కథితంతేధనంజయ
మయిచేదస్తితేప్రీతిః నిత్యంకురుకులోద్వహ
అధ్యాత్మమేతచ్ఛ్రుత్వాత్వం సమ్యగాచరసువ్రత
తతస్త్వంసమ్యగాచీర్ణే ధర్మేస్మిన్కురునందన
సర్వకామవిశుద్ధాత్మా మోక్షంప్రాప్స్యసికేవలం॥

(இ-ள்.) வாராய் அர்ஜுனா! குருவானவன் யான். என்னுடைய மனசே சிஷ்யனென்றறிந்துகொள். உன்னிடம்வைத்த பிரீதியினாலே யிந்தச்சாஸ்திரம் ரஹஸ்யமாயிருந்தாலு முனக்குச்சொன்னேன். வாராய் அர்ஜுனா! என்னிடத்திலுனக்குப் பிரீதியிருக்குமாயினிந்த வேதாந்தசாஸ்திரத்தைக்கேட்டு நீயிதை நித்தியமாசரித்துக்கொண்டிரு. அப்படி நீயிந்தமோக்ஷ தர்மத்தை நன்றாயறிந்து ஆசரிக்கவருங்கால் ஸகலபுண்ணியசித்தியால் சுத்தாத்மாவாகக் கைவல்ய மென்னும் மோக்ஷத்தை யடைகிறாய். எ-று.

என்று ஆசிர்வதித்து முடிவு கூறியபடியாம்.

## அவதாரிகை.

சகலார்த்தங்களையும் ஸங்கிரகித்துச் சொல்லியபின்னர் அர்ஜுனனானவன் முன்னர்க்கிரகித்த வர்த்தத்தை யிப்போது செய்யும் விவரணாநுஸாரத்தால் நன்றாகிரகிக்கட்டுமென்றாலோசித்து, ஸ்ரீ கிருஷ்ணராலநுகீதாசாஸ்திரங்களில் கீதாசாஸ்திரத்தினுடையவிவரணமானது செய்யப்பட்டதென்று இந்தச்சாஸ்திரத்தில் மேலெடுத்துக் காட்டுகின்றார்.

(சுலோகம்.)

బ్రహ్మణ్యేవంస్వచేతోనియమనబలతఃస్థాయితద్గ్రంధిమోక్షం
స్వేనైవోక్తం విమృశ్యప్రపదనవచనంతత్ప్రతీతార్థనిష్ఠం
యత్తత్సర్వస్యచాహంహృదిముఖవచనంతత్పునశ్శాస్త్రదృష్ట్యే
త్యేవంపార్థో౽వగచ్ఛేదితిమతివివృతౌయత్రగీతాశయస్య. ॥౧౭॥

## மொழிபெயர்ப்பு.

பரனிடத்திலுள்ளமடக்கியதாலுண்டாமுடியின்பாழைநோக்கி.
யுரமுறத்தான்சரணடைந்தவுரையையருச்சுனனறிவானெனவுமோங்கும்
பரமெனயானெவருள்ளுமுளனென்னுமுகவசனப்பண்புமன்னோன்
றெரிந்திடுவனெனவுமுரைத்தனன்கீதைப்பொருளநுகீதையிற்சீர்மாலே. (கஎ)

(இ-ள்.) பரமசிவனிடத்தில் சித்தநிரோதத்தாலுண்டாயிருக்கிற தனது ஹ்ருதயகிரந்திமோக்ஷத்தை யாலோசித்துக் கிருஷ்ணர் தான்சரணமடைந்த வசனமெதுவோ, அதை அர்ஜுனனறிவானெனவும், சர்வஹ்ருதயத்திலும் நானேயிருக்கிறேனென்னு நம்முடைய முகவசனத்தையுஞ் சாஸ்திர திருஷ்டியால் அவனறிந்திடவே செய்வானெனவும் அநுகீதையில் கீதையினர்த்தத்தை விவரணஞ்செய்தனர். எ-று.

என்றிப்படி அர்ஜுனனறியுந் தன்மையைக்காட்டலால் கீதையநுகீதைகளின்றாற்பரியங்க ளிவையென்றுபுலப்பட்டன.

పూర్వమప్యేతదేవోక్తం యుద్ధకాలవుపస్థితే
మయాతవమహాబాహో తస్మాదత్రమనఃకురు॥

(இ-ள்.) இந்த்வர்த்தமே யுத்தகாலநேரிட்டபோதும் உனக்கு என்னாலே சொல்லப்பட்டது. ஆகையால், இந்த அர்த்தத்தில் மனசை வையென்று உபசங்காரஞ் செய்தனர். எ-று.

என்னுமிதனல், அவ்விடத்திற் குருசிஷ்யோபாக்யான மென்ற வியாஜத்தினாலே பிரம்ஹத்தைச் சரணமாக வடைந்ததனல் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஹ்ருதயகிரந்தி மோக்ஷத்தை முன்னிட்டதான சித்தியுண்டாச்சு தென்று தெளிவாய்ப் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த ஆதிபுருஷனையே அடைகின்றேனென்றுகூறிய நிலையிலிருந்தபடியே அஹம்பாவனையினாலே யாதொருபிரம்ஹோபதேசத்தை ஸ்ரீகிருஷ்ணர்செய்தனரோ வவையெல்லாம் சாஸ்திர திருஷ்டியினான் முடிந்தவையறிக. எஜுர்வேதத்தில், சித்வல்லி என்னுமுபநிஷத்தில் பிராணனாக விருக்கிறேன். அறிவுமயமான வாத்மாவாயிருக்கிறேன். ஆயுளை யமுதமாகவுபாசியுங்களென்று இந்திரனாற் சொல்லப்பட்டதாகப்பெறப்பட்டிருக்கின்றது.* அவ்விந்திரனாற் சொல்லப்பட்ட பிரம்ஹபாவத்தி னுடைய வுபதேசப்படியே கிருஷ்ணர் தம்மிடங்கூறிய பிரம்ஹபாவத்தையு மறியவேண்டியது. கிருஷ்ணர் ஒருக்காலும் பிரம்ஹமாகமாட்டார். தான் பிரம்ஹமென்று கிருஷ்ணர் சொன்னதெல்லாம் பிரம்ஹபாவனையாலன்றி வேறாகாது.(தமேவசாத்யம் புருஷம்பிரபத்யே)என்னும் வசனத்தைத் தொடர்ந்து பார்க்கையில் கிருஷ்ணரைக்கூறும்பிரம்ஹபாவனாவசனங்களுக்கு வேறுவிதமாக அர்த்தத்தைவரவழைத்தால்அநியாயமாய்முடியும்.அப்படியானாலும்,கிருஷ்ணரால் அநுகீதாசாஸ்திரங்களிலே விரிவாகச்சொல்லப்பட்டிருக்கிற கீதையினுடையவபிப்பிராய விவரணத்தையநுசரித்து அஹம்பாவனாசித்தியை யடைந்தவரென்றுசொல்லுவதே நியாயமென்றறிக.

## அவதாரிகை.

இந்தப்பிரகாரம் கீதாசாஸ்திரத்தினாலே விவரிக்கப்பட்ட வெகுமகிமைசாலியாயுள்ள ஸ்ரீ கிருஷ்ணராலு மாசரிக்கத்தக்கதாக அநுகீதாசாஸ்திரத்தில் யாதொரு பரம்பொருள் பிரதிபாதிக்கப்படுகிறதோ, அது பரமசிவனேதவிர வேறில்லையென்று

* "శాస్త్రదృష్ట్యాతూపదేశోవామదేవవత్" என்றஸூத்திரப்படி நானேமனுஷ் ருதயாதிகளிலிருக்கிறேனென்ற வாமதேவரிஷியின்வசனத்தாலுங்காண்க.

பிரசங்கத்தைச்சுருக்கி முடித்து அந்தவிஷயத்தில் சமிசயத்துக்கு ஹேதுமான விரோதத்தைப் பரிகாரம்பண்ணுகின்முர்.

(சுலோகம்.)

తచ్చబ్రహ్మప్రపత్త్యాస్స్వనమసురరిపోరీశ్వరత్వంనచాన్యో
నాహంకంచిత్ప్రపద్యేవిబుధమితివచశ్శ్రోతురుత్కృష్టబుద్ధ్యై
నేదంతేనీలకంఠంపరిమితఫలదంనప్రబుద్ధాఇతీదం
బ్రహ్మైక్యధ్యాన్యవిద్యావిషయమితరథానాస్తిభూయోవిరోధః. ॥౧౮॥

## மொழிபெயர்ப்பு.

பிரபத்தியாஞ்சரணம் பிரமமுடைத்தசுரரிபு பேசுமீசத்
தரமுளனன்றெவரையுநானடையேனென்றதுவிண்டுதருமங்கேட்குந்
தருமனுக்காதிக்கம்வரத்தன்பானஞ்சணிகண்டற்சாரார்சான்றோர்
பரிமிதலாபங்கருதியென்றதயிக்கியர்க்கன்றேல்பாதையாமால். (கஅ)

(இ - ள்.) பிரபத்தியென்னுஞ் சரணமானது பிரமமாகிய சிவனிடத்திலேதானே செய்யத்தக்கது. அசுரசத்துருவாகிய கிருஷ்ணனுக்கு ஈசுவரத்துமில்லை. யாரையும் நான் ஆச்சிரயிக்கிறதில்லையென்று கண்ணன்சொன்னதுவைஷ்ணவ தருமங்களைக் கேட்குந் தருமநந்தனருக்குத் தன்னிடத்தி லுத்கிருஷ்டபுத்தியுண்டாகும்பொருட்டாம். நீலகண்டனைப் பரிமிதபலதாயகராக வித்துவான்கள் சேவிக்கமாட்டார்களென்றது ஐக்கியத்தியானவிஷயமாம். இப்படிக்கொள்ளாவிடின், இதரமானவநேகபிரமாணங்களுக்குவிரோதமுண்டாகும். எ-று.

இவ்வுண்மைப்பொருளேயன்றி வேறுவிதமாகப் பொருளுண்டாகமாட்டாது. வெகுவாயுள்ள பிரமாணங்கள் விஷ்ணுபாரம்யத்தைத் தடுத்தலேபோதும். (தமோவசாத்யம் புருஷம்பிரபத்யே) என்றவிடத்தில் பிரபத்திவிஷயமாய்ப் பிரம்ஹபரமாயிருக்கிற புருஷசப்தத்தை அழிவில்லாதவனாகிய வீசுவரன் வகித்துக்கொண்டிருக்கிருனென்று பெறப்பட்டதனாலும், பூதங்களுக்கு மீச்சுவரன் என்று கூறினமையாலும் ஈச்சுவரநாமத்தினாலே வரப்பட்ட அர்த்தத்தைச் சிவனிடத்திற் கிரகிப்பதே யோக்கியம். இந்தச் சித்தாந்தமானது முன்னமேதானே விவரிக்கப்பட்டிருக்கின்றது. தேவதாந்தரத்தின் முடிப்பது கூடாதென்கையி லுண்டாகிற சங்கையைப் பரியாலோசிப்பாம்.

రుద్రంసమాశ్రితాదేవా రుద్రోబ్రహ్మాణమాశ్రితః
బ్రహ్మామామాశ్రితోరాజన్నాహంకంచిదుపాశ్రయే॥

இ-ள். தேவர்களுருத்திரனை யாச்சிரயிக்கின்றனர். உருத்திரன் பிரம்ஹாவை யாச்சிரயிக்கின்றனன். பிரம்ஹா என்னை யாச்சிரயிக்கின்றனன். நானொருவரையும் ஆச்சிரயிக்கிறதில்லை. எ-று.

இந்தவசனம் தருமநந்தனனைப்பார்த்துக் கிருஷ்ணர் சொன்னதாகப் பெறப்பட்டமையால் மேற்போந்த சிவபாரம்யபங்கமுண்டாகின்றது.

బ్రహ్మాణంనీలకంఠంచ యాశ్చాన్యాదేవతాస్స్మృతాః
ప్రతిబుద్ధానసేవంతే యస్మాత్పరిమితంఫలం॥

இ-ள். பிரம்ஹாவையும், நீலகண்டராகிய வுருத்திரமூர்த்தியையும், ஏனையதேவர்க்களையும் விவேகிகளா யுள்ளபேர் சேவிக்கிறதில்லை. யாதொருகாரணத்தினு லவ்வாராதனம் பரிமிதபலத்தைக் கொடுக்கின்றமையால். எ-று.

என்னுமிவ்வாக்கியமும் விரோதம் பயத்தலா லிவற்றினுண்மையை விசாரிக்கில், வைஷ்ணவ தருமங்களைச் சங்கற்பித்துக் கேட்டபேர்க்கு அபிருசியுண்டாகும்படிச்சொன்னமையே யமையும். அறிஞராயுள்ளபேர்களால் சிவனைச் சேவிக்குந் தன்மையெப்படி நிவாரணத்தைப் பெறுமெனின், நானொருவரையு மாச்சிரயிக்கிற தில்லையென்றுரைத்த கிருஷ்ணன் பலமுறை சிவனை யாச்சிரயித்த பிரசங்கமேராளமா யாண்டுப்பெறப்பட்டிருத்தல் பிரஸித்தமேனும், வைஷ்ணவர்களாலே அநுஷ்டிக்கத் தகுந்த வைஷ்ணவதருமங்களைச் சொல்லும்படிக் கேட்டுக்கொண்ட தருமராஜனைக் குறித்துப் பிரவர்த்தித்து வைஷ்ணவ சாஸ்திர ரீதியாய்க் கூறவந்தமையாற் போதருமென்க. இந்தப்பிரசங்கம் வைஷ்ணவதர்மப் பிரகரணத்திலன்றி வேறோரிடத்திற் செய்யப்பட்டதின் றுகையா லின்னவற்பவசனங்களைக்கொண்டே பாஹுள்யமாயுள்ள சைவபரத்வ வாசகங்களைத் தள்ளுவதற்கு அறிஞராயுள்ள பேர்க்கெங்ஙன மிடமுண்டாகும்?

மேல் (பிரம்ஹாணம் நீலகண்டஞ்சேத்) இத்யாதி வசனங்கள் அஹம்பிரம்ஹோர்பாஸனநிஷ்டவித்வத்விஷயம். (பிரதிமாஸ்வல்பபுத்தீனும்) என்றற்றொடக்கத்து வசனார்த்த விவேகத்தால் சேஷத்வாநுஸந்தானத்தைக் கர்ப்பத்திலுடைய ஸேவைக்கு அநுஸந்தானம் வருகையா லனேகவசனப் பிராமாண்ய புத்தியே யங்கிகரிக்கத்தக்கது.

அல்பவசனம் அப்பிரமாணமும், அநேகவசனங்கள் பிரமாணமுமாகின்றமையாலும், அநுகீதை, கீதையித்யாதிகளில் (தமேவசாத்யம்) என்றற்றொடக்கத்து வாக்கியத்தைச் சாதிக்கப்போதுமான வநந்தபிரமாணங்கள் போதருமாகையாலும், பாரதத்திலுண்டான பர்வங்க ளெல்லாவற்றினும், பாரதாந்தர்க்கதமாகிய ஹரிவம்சத்தினும் விஷ்ணுவுக்குச் சிவாராதனஸித்தி யோராளமாகக் கூறப்பட்டமையாலும் அறிஞருடைய பரியாலோசனையே பிரயோசனத்தை யடையுமென்க.

இன்னுஞ் சிலவசனங்களைப் பரியாலோசிப்பாம்.

విష్ణురాత్మా భగవతో భవస్యామితతేజసః
తస్మాద్ధనుర్జ్యాసంస్పర్శం సవిషేహే మహేశ్వరః॥

இ-ள். தேஜோமூர்த்தியாயுள்ள பகவானாகிய சிவனுக்கு விஷ்ணுவானவர் ஆத்மாவாக விருக்கிறார். ஆகையால், தனுஸ்ஸினது நாரியின் பரிசத்தை அந்தச் சிவன் சகித்தார். எ-று.

என்று கர்ணபர்வத்தில் திரிபுர விஜயோபாக்யானத்திற் சொல்லப்பட்டது.

యస్త్వాం ద్వేష్టి స మాం ద్వేష్టి యస్త్వామను స మామను
ఆవయోరంతరం నాస్తి శబ్దైరర్థైర్జగత్పతే
నామాని తవ గోవింద యాని లోకే మహాంతి చ
తాన్యేవ మమ నామాని నాత్ర కార్యా విచారణా॥

இ-ள். யாவனொருவ னுன்னைத் துவேஷிக்கிறானோ, அவன் என்னைத் துவேஷிக்கின்றவனாவான். யாவனொருவ னுன்னை யநுசரிக்கின்றானோ, அவன் என்னை யநுசரிக்கின்றவனாவான். சத்தத்தினாலும், அர்த்தத்தினாலு முனக்குமெனக்கும் பேதமேகிடை

யாது. லோகபதியாகிய ஹேகோவிந்தா! மகிமைபொருந்திய வுன்னுடையபெயர்கள்யாவோ, அவைகளே யெனதுபெயர்களாகும். இதில் விசாரிக்கவேண்டிய தொன்றுமில்லை. எ-று.

என்று ஹரிவம்சத்தில் கிருஷ்ணனைப்பார்த்துச் சிவனருளிச் செய்ததாக வெளிப்பட்டது.

இவ்விரண்டு வசனங்களாலும் விஷ்ணுவைக் காட்டிலும் அபகர்ஷமும், அவரோடு ஸாம்யமு முடையவராக முறையே சிவபெருமா னெண்ணப்படுகையா லிவற்றி னுண்மையை யீண்டு விளக்குதும். உமக்குப் பக்தனுயிருந்து, உம்மைப்பஜிக்கிற வடியேனை யாளக்கடவீரொன்று (தமேவசாத்யம்) என்றதாதி வசனங்களைக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் பிரபத்தி பண்ணினுரென்பதை யறிகின்றேம். இதரமாயுள்ளபேர்க்குப் பாக்கிய மோக்ஷங்களி னிமித்தம் பிரபத்தியானது தானுகியவிஷ்ணுவுக்குச்சொல்லியது மூலமூர்த்திரூபன் சிவன் என்று கருதியாம். அவரது மகிமாதிசயத்தைப் பிரஸித்திபண்ணுகிற நிமித்தமாக வுலகங்களை யநுசரிக்கின்றவராயும், சகல தரும பிரவர்த்தகராயுமிருக்கிற விஷ்ணுவுக்குச் சிவனுகப் பிரதிபாதிக்குஞ் சொல்லானது அங்கீகரிக்கவேண்டியதே! அந்தப்படியே மோக்ஷதர்மத்திலும், கூர்மபுராணத்திலும் போந்த கிருஷ்ணர் வசனம் வருமாறு.

మయాప్రమాణంహికృతం లోకస్తదనువర్తతే
నహిదేవోస్తికశ్చిన్మేవరంపాండవనందన
ఇతిసంచింత్యమనసా పురాహంవిశ్వమీశ్వరం
పుత్రార్థమారాధితవానహమాత్మానమాత్మనా॥

இ-ள். என்னுலே யெது பிரமாணமாகக் கொண்டாடப்பட்டதோ, அதை யிந்த வுலகமானது அநுசரித்துக்கொண் டிருக்கின்றது. எனக்கு ஒருவர்மாவது ஒருவருங் கொடுக்கவேண்டியதாயில்லை. எ-று.

என்று பெறப்பட்ட வபிப்பிராயத்தைக்கொண்டு (மோகிதாளானபேர்) என் மனசினு லாலோசித்து முன்னர் நான் விசுவரூபமாயுள்ள சிவனைப்புத்திரார்த்தமாக வாராதித்தேன் என்பதை

யென்னாத்மாவினாலே யென்னாத்மாவையே நான் பூசித்தேன் என்று பொருள்விரிப்பபொனக் கிருஷ்ணர் கூறினர்.

నైవపశ్యంతితందేవం మోహితామమమాయయా
తతోహంస్వాత్మనోమూలం జ్ఞాపయన్పూజయామితమ్॥

இ-ள். அப்படிப்பட்ட தெய்வத்தை யெனது மாயையினாலே மோகித்திருக்கிற பாஷண்டிகள் பார்க்கவழியார்கள். ஆகையால், என்னாத்மாவுக்கு மூலகாரணமென்று சகலருக்குந் தெரியப்படுத்துகிறவனாக அந்தச்சிவனை நான்பூசிக்கிறேன். எ-று.

என்று பெறப்பட்ட கிருஷ்ணர் வசனத்தால் நான் ஒருவரையும் ஆச்சிரயிக்கிறதில்லையென்ற சுலோகத்தினபிப்பிராயம் வெளிப்பட்டது. அப்படியே, அசுவமேதபர்வத்தில், வைஷ்ணவ தருமங்களையே கேட்டுக்கொண்டிருக்குந் தருமநந்தனரைக்குறித்து அந்த வைஷ்ணவ தருமங்களையே யுபதேசம் பண்ணுகைக்குக் கிருஷ்ணராலே பிரவர்த்திக்கப்பட்ட ஸமயத்தில் வைஷ்ணவ தர்மசாஸ்திரத்தில், வைகானசாளெப்படிச் சொல்லுகிறார்களோ, பாஞ்சராத்திரிகளெப்படிச்சொல்லுகிறார்களோ, அவைகளைச்சொல்லியருளுமென்றதுமுதலிய பிரசினைகளால், கேவலம் வைஷ்ணவ தருமங்களையே யடிக்கடிக் கேட்கத்தொடங்கிய தருமநந்தனருக்கு அவைகளைச்சொல்லுமிடத்திலும், ஸ்ரீ சிவபெருமானது பூசையானது இவ்வைஷ்ணவபூசையோடு துல்ய விகல்பமென்றே பாவனாரூபத்தால் ஸமானமான பலத்தைக்கொடுக்குமாற்றலுடையதாகக் காண்பிக்கப்பட்டது.

నివేశయతిమన్మాత్మాన్య ఆత్మానంమాంసరశ్మచిః
రుద్రంపక్షీణమూత్యాన్వాచతుర్దశ్యాంవిశేషతః
సిద్ధైర్బ్రహ్మర్షిభిశ్చైవ దేవలోకైశ్చపూజితః
గంధర్వైరప్సరోభిస్సంఘైశ్చ గీయమానోమహాతపాః
ప్రవిశేత్సమహాతేజానూంవాశంకరమేవవా
నస్యాత్పురస్పవోరాజన్నాత్రకార్యావిచారణా
విష్ణువేస్మపనంయస్తు మమకుర్యాద్ధరస్యవా
అర్చనంచయథాన్యాయ్యం తస్యపుణ్యఫలంశృణు

దశజన్మకృతంపాపంతస్యసద్యోవినశ్యతి
దశానామశ్వమేధానా మిష్టానాం భతేఫలం
విమానందివ్యమారూఢః కామరూపీయథాసుఖం
దివ్యవర్షసహస్రాణాం కోటిమేకాంప్రమోదతే
తతశ్చాపిచ్యుతఃకాలా దిహలోకేద్విజోత్తమః
చతుర్ణామపివేదానాం పారగోబ్రహ్మవిద్భవేత్
చంద్రసూర్యగ్రహేధామ్ని మమవాశంకరస్యవా
గాయత్రీంమామికాంవాపి జపేద్యశ్శంకరస్యవా
శంఖతూర్యనినాదైశ్చ కాంస్యఘంటాస్వనైరపి
కారయేత్తుస్వసింభక్త్యా తస్యపుణ్యఫలంశృణు
సగచ్ఛేదక్షిణామూర్తిం మాంవానాత్రవిచారణా॥

இ-ள். எவன் ஆத்மாவாகியவென்னை யென் மூர்த்தியோடே யெழுந்தருளப்பண்ணுகிறானோ, அல்லது ஸ்ரீருத்ரமூர்த்தியைச் சதுர்த்தசி புண்யகாலத்தில் தக்ஷிணாமூர்த்தியோடுசேர்த்து விசேடமாகப்பூசிக்கிறானோ, அவன்ஸித்தர்களாலும், தேவலோகவாசிகளான விருடிகளாலும், கந்தருவராலும், பூதகூட்டங்களாலும் புகழப்பட்ட மகாதபசியாயும்,மகாதேஜசுள்ளவனாயும் விளங்கி யென்னிடத்திலைக்கியமாவான். அல்லது, சங்கரனிடத்திலொடுங்குவான். அவனுக்கு மறுபடியும் பிறப்பானது இல்லை. இவ்வுண்மையில் விசாரம் வேண்டியதேயில்லை. எவனானல் விஷு புண்யகாலத்தில் எனக்காவது, சிவனுக்காவதுஅபிஷேகத்தைச்செய்கிறானோ, விதிப்படி அர்ச்சனையைச் செய்கிறானோ, அவனுடைய புண்யபலத்தைக்கேளும். தசஜந்மங்களில் செய்த பாவங்களினின்றும் அவனப்போதேவிடுபடுகிறான். சாஸ்திரப்படியே செய்யப்பட்ட பத்து அசுவமேதயாகங்களின் பலத்தையடைகிறான். நினைத்தவிடத்தில் சஞ்சரிக்கும்படியான திவ்யவிமானத்திலேறித் திரிந்து ஒருகுறைவுமில்லாமல் ஆயிரந்தேவவருஷஸங்கியையுடைய கோடிவருஷம் ஆநந்தப்பட்டுக்கொண்டிருப்பன். அதன் பின்னர், அந்தலோகங்களினின்றுந் திரும்பி யிந்தலோகத்தில் பிராம்ஹணகுலத்திற் பிறந்து நாலுவேதங்களையுங் கரைகண்டு கிருதார்த்தனாவன். சந்திரகிரகண சூரியகிரகண புண்ணியகாலத்தில் என்னுடைய ஆலயத்தி

லாவது, சிவனுடைய வாலயத்திலாவது காயத்திரி ஜபம்பண்ணு கிறவனும் முற்படியே பெறுவன். எ-று.

தனது பஜனத்தாலும், சிவனது பஜனத்தாலும் ஸமபலனுண்டாவதாகக் கூறிய கிருஷ்ண ரபிப்பிராயத்தை யூகித்திடின், அவர் * வாஸ்தவாபிப்பிராயமினைத்தென்பது விளங்கும். இவ்வுண்மையைப் பின்வாக்கியங்களால் விசாரிப்பாம்.

విశేషతీర్థం సర్వేషా మశక్తానామనుగ్రహాత్
భక్తానాం తారణార్థం వై వక్తుమర్హసి ధర్మతః॥

இ-ள். அசக்தாளாயிருக்கின்ற சகலமான பக்தர்களுமுய்யும் பொருட்டு விசேட தீர்த்தத்தை யநுக்கிரகத்தினலே தர்மமாகச் சொல்லுகிறதற்குத் தேவரீர் யோக்கியராயிருக்கின்றீர். எ-று.

இது, பகவானிடத்திலே ஸேவையைச்செய்கிறதற்குச்சக்தியில்லாமலிருக்கிற பக்தர்களுக்கு அதற்கு ஸமானமாகச் சேவிக்கத்தகுந்த தீர்த்தம் யாதென்று பிரசினித்ததாயிற்று.

மேல் கிருஷ்ணர் சொல்லுகின்றார்.

సత్యస్యవచనంతీర్థమహింసాతీర్థముచ్యతే
తపస్తీర్థందయాతీర్థంశీలంతీర్థంయుధిష్ఠిర
మద్భక్తస్సతతంతీర్థంశంకరస్యవిశేషతః॥

இ-ள். சத்தியமானவசனம் உயர்ந்ததீர்த்தம். ஹிம்சை செய்யாதிருப்பது அஹிம்ஸாதீர்த்தமென்று சொல்லப்படுவது. தவமானது தீர்த்தம். தயையானது தீர்த்தம். என் பக்தனானவன் தீர்த்தம். இவற்றைக்காட்டிலும் விசேடமாகச் சிவபக்தன் எப்போதுந் தீர்த்த ரூபியாயிருப்பன். எ-று.

இந்த வுத்தரத்தால் தன்னுடைய பக்தனையபேட்சித்துச் சிவபக்தனுக்கு அதிக தீர்த்தத் தன்மை வெளிப்பட்டதன்றியும்,

* (தருமநந்தனர்கேட்டது வைஷ்ணவதருமம். அதைச் சொல்லப் புகுந்தவர் ததிதிரிக்தங்களைக் களையவேண்டியது. அப்படிக்கின்றி யவ்வைஷ்ணவ தருமத்தோடு சைவதருமத்தை ஸமங்கூறினர். வைஷ்ணவத்தை யுணரவேண்டியவர்பொருட்டு ஸாம்யங்கூறினதேயன்றிக் கிருஷ்ணருடைய ஸொந்தவபிப்பிராயம் அதற்கு மேலிட்டதென்பதே யாம்.)

ஆரணியபர்வம், தீர்த்தயாத்திராவிதியில் சில சிவக்ஷேத்திரங்களிலே செய்யப்பட்ட சிவார்ச்சனைகளுக்குக் காணப்பட்டிய பலமும், சில க்ஷேத்திரங்களி னடக்குஞ் சிவார்ச்சனைகளுக்குப் பரமாங்கதி பலமுங்கூறிப் பரமமங்களகாரணத்தை விதந்திருப்பதே போதும். இவை மோக்ஷஹேதுவென்றுஞ் சொல்லப்பட்டபடியா லின்ன வசந்தவசன பாஹுள்யங்களின்றீர்ப்பால் (பிரம்ஹாணம் நீலகண்டஞ்ச) என்ற வசனுபிப்பிராயம் வெளிப்படையாயிற்று.

இவ்வுண்மையை யறியாமல் நாராயணனைக்காட்டிலும் வேறுயுள்ளதேவர்க்களுடைய பஜனமானது அளவிடப்பட்டபலமுள்ளது என்று தெரிந்துகொண்டவனைப் பைத்தியக்காரனுகக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அப்படித்தெரிந்துகொண்டவர்கள் குரங்குகளும், நாய்களுமாக வெண்ணப்படுவர். நாராயணருடைய ஸேவையிலாசை யுண்டாகும்பொருட்டுக் கௌரவகல்பனமாத்திரத்தனவாகவே மேல்வசனங்களை மேலோர் கிரகித்திடுவ ரறிக.

வெகுவசனங்களுடைய பிரமாணங்களைவிட்டு ஏகதேசவசனத்தையே கைக்கொண்டபடி வாக்கியங்களினது ஸத்தியார்த்தத்தையு மறியாமற்போகு மொருவனைப் பசுவை வஞ்சனை செய்த பாவத்தையடைவன் என்பது சாஸ்திரநிச்சயம். இனி, இராமாயணத்தில், (கோப்ரதாரந்ததாகச்சேத்) என்ற விடத்தில் கோப்ரதார தீர்த்தத்தினுடைய மகிமையினுல் ஸ்ரீராமசந்திரருக்குச் சொர்க்க பிராப்திசொல்லியவசனத்திற் பெறப்பட்டதற்கேற்பப் பாரதம் சபாபர்வ வசன மொன்றை யீண்டுவிசாரிப்பாம்.

తస్యాంరాజర్షయఃపుణ్యాస్తథాదేవర్షయోమలాః
యమంవైవస్వతంతాతప్రహృష్టాఃపర్యుపాసతే
యయాతిర్నహుషఃపూరుర్మాంధాతాసోమకోనృగః
రామోదాశరథిశ్చైవలక్ష్మణశ్చప్రతర్దనః॥

இ-ள். அந்த எமதருமராஜன் சபையில் சுத்தராயும், புண்ணியசொரூபராயு மிருக்கிற தேவரிஷிகள், ராஜரிஷிகள் முதலினோர் வைவஸ்வதனென்னும் எமதர்மராஜனைச் சந்தோஷமுடையவராயுபாசித்துக்கொண்டிருக்கின்றார்கள். யயாதி, நகுஷன், புரூரவன், மாந்தாதா, சோமன் என்றாரம்பித்து அன்னோர் சொர்க்க

மடைந்தபின்னர் எமனுடைய சபையிலிருந்துகொண்டு அவ்விய மனையுபாசித்துக் கொண்டிருக்கிற ராஜரிஷிகளி லொருவனாகவே தசரதகுமாரனாகிய ஸ்ரீராமனு மெண்ணப்பட்டனன்.

அப்படியே யவனது தம்பியாகிய லட்சுமணனும், பிரதர்த்தன னென்பவனுமெண்ணப்பட்டனர். இதனால், அந்த ராமன் கர்மதுக்கதீனமான லோகபிராப்தியை யடையப்பெற்ற வோர் சீவனென்பதே யேற்பாடாயிற்று. இப்படியே கிருஷ்ணனிடத் திலுங் கண்டுகொள்க.

తతశ్చార్జున ధనుశ్శ్రేష్ఠం కరాగ్రాచ్చ్యుతం మమ
మోహాత్సన్నస్తు కౌంతేయ రథోపస్థముపావిశం॥

(இ-ள்.) வாராய் அர்ஜுனா! அதற்குப்பின்னர் எனதுகையி னின்றும் ஸாரங்கமென்னும் வில்லானது நழுகிவிழுந்துவிட்டது. அப்போது மூர்ச்சையடைந்தவனாகி நான் தேரினது அடித்தட் டிலேபோய் விழுந்தேன். எ-று.

என்று கிருஷ்ணன் அர்ஜுனனிடம் சொன்னானென்று ஆரணியபர்வத்தில் சாலுவயுத்தத்தில் பெறப்பட்டதனால், இராமனைப் போலவே கிருஷ்ணனும் மோகமான வஞ்ஞானச்சேற்றிலழுந்திய ஜீவவிசேடத்தை யுடையானென்பதுசொல்லாமேயமையும். இப் படிப்பட்ட வுண்மைகளால் இந்தப்பாரதமுழுதும் கீதை, அநுகீதை, மோக்ஷதர்மம், வைஷ்ணவதர்மமுட்படத் தொனிவிர்த்தியினாலே சிவபாரம்யத்தையே சொல்லி யிளைப்பாற்றிக் கொண்டதாயும், சிவனையேபிரதானமானதெய்வமாகப்படைத்ததாயும், பகவானாயிருக்கிற வியாசரால் செய்யப்பட்டதென்று இந்நூலால் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருகின்றது. இதனால், யாவும் யோக்யமாக விளங்கினமையறிக.

## அவதாரிகை.

ஈண்டுச்செய்துமுடித்த ஸ்தோத்திரத்துக்குப் பிரபாவமுண்டாகும்பொருட்டு மங்களாதிகள் செய்தலவசியமென்று கூறுமாப்தர் வசனப்பிரமாணத்தால், இந்த ஸ்தோத்திர ஸமாப்தியில்

சிவபாரம்பத்தை யுபதேசம் பண்ணுகிற குருநமஸ்காரமான மங்களத்தை யாசரிக்கின்றார்.

சுலோகம்.

ఇత్థం చ శ్రీభారతం యః ప్రబంధం వ్యక్త్వావ్యాసశ్శాంభవోత్కర్షవర్షి
ధన్యస్యధన్యస్యధన్యస్యమూర్ధన్యధన్యస్త్రాశౌరింతత్సాక్షిణంచానతోస్మి॥

மொழிபெயர்ப்பு.

பரசிவன்றனுயர்வைவருடித்திடும்யாதொருவியாதர்பாரதத்தைச்
சிரமுறவேவியங்கியத்தாலியற்றினரோவன்னவொளிர்திருமாறுநுந்
தரமுறுசாட்சியுமாவார்தம்மையுயர்தொனிமார்க்சஞ்சரிப்போர்தம்மிற்
பெரியர்மதித்திடுமடியேன்றன்னியனுயெந்நாளும்பேணுவேனே. (௧௧)

இ-ள். பரமசிவனுடைய வுத்கர்ஷத்தை வர்ஷித்துக்கொண்டிருக்கிற யாதொரு வியாசரானவர் வியங்கியார்த்தத்தால் பாரதமென்னும் பிரபந்தத்தைச் செய்தாரோ, அப்படிப்பட்ட விஷ்ணுவடிவமுடையவரும், அந்தப்பாரதத்துக்கு ஸாக்ஷியா யுள்ளவருமாகிய வியாசரைத் துவனிமார்க்கத்தில் ஸஞ்சரிப்பவர்களுக்குச் சிரேஷ்டராயுள்ளவர்களில் தன்யனுகிய யான் வணங்குகின்றேன். எ-று.

தீக்ஷிதஸ்வாமிகள் துதி.

தனியன்.

வேதமுபநிடமிருதிவிளம்புபரத்துவப்பொருளை
யோதுசிவாகமந்தெளியவடித்துதவுமொண்பொருளை
யேதமில்சேர்ப்பாரதத்தினியங்குசிவப்பழம்பொருளைத்
தீதறவெற்கருளப்பதீக்கதர்தாடிணந்தொழுவாம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதேந்திரர்

திருவடிவாழ்க.

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீஹரதத்தாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த

# ஸ்ரீசிவபஞ்சாக்ஷரீஸ்தோத்திரம்.

:o:

నాదాంతరాయనరనారదవందితాయ
నాదప్రియాయనయనత్రయసంయుతాయ
నాగేశ్వరాయనగజాత్మజసేవితాయ
తస్మైనకారాయనమశ్శివాయ. ॥౧॥

మాహేశ్వరాయమధురప్రియవాచకాయ
మారాంతకాయమమసర్వసుఖప్రదాయ
మాయామయాయమణికుండలభూషితాయ
తస్మైమకారాయనమశ్శివాయ. ॥౨॥

శివప్రదాయశిఖివాహనపూజితాయ
శ్రీనాథవందితపదాయశివాప్రియాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైశికారాయనమశ్శివాయ. ॥౩॥

వాగీశవిష్ణుసురవందితవిగ్రహాయ
వారాణసీనగరమధ్యసుసంస్థితాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైవకారాయనమశ్శివాయ. ॥౪॥

యోగీశ్వరాయయజయాజనానుగ్రహాయ
యోగీశ్వరాయయతిహృత్కమలాశ్రితాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైయకారాయనమశ్శివాయ. ॥౫॥

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.